சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone : No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு பங்குனிமாதம் 18-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | 11-ம் இலக்கம்

## கத்தோலிக்க பிரசுரஞாயிறு விசேஷ இதழ்

## தேனீபோல் தேர்ந்தெடுத்து வாசி

—: பரிமேலர் எஸ். அருளானந்தம் :—

யான் இதன்கீழ் எழுதும் சிந்தனைகளைக் கிறிஸ்துவ பெற்றோருக்குப் பொதுவாகவும், கிறிஸ்துவவாலர், யுவதிகட்குச் சுட்டிப்பாகவும் தருகின்றேன். இன்னும், கத்தோலிக்க சகோதர, சகோதரிகளுள், நல்வாசினையை விருத்திசெய்ய, அவர்கள்மேல் சுமந்த கடமையையும் நினைவூட்ட ஆசிக்கின்றேன்.

"எடுத்து வாசி". எதைவாசிக்க வேண்டும்? நாம்வாசித்துப் பயனடையக்கூடிய ஆயிரம், பதினுயிரம் நூல்கள், எம் அரிய தாய் மொழியிலும், ஆங்கிலத்திலும் உண்டு. அவைகள் யாவையும் எந்த வித்துவானாலும் படித்துக் கரைகாண முடியாது. ஆகவே, முதியோர், கற்றோர், துறவிகள், ஞானிகளுடைய மதிப்பை உசாவி அறிந்து, உனக்குப் புத்தித்தெளிவையும், சன்மார்க்கநெறியையும், ஞானஒளியையும் தரக்கூடியவைகளைத் தெரிந்து வாசி.

எக்காலத்திலும் பார்க்கத் தற்காலத்திலே ஒரு பாரிய பயங்கரக் கொள்ளைநோய், மனுமக்களைப் பாதித்துவருகிறது. அது காட்டுத்தீபோல் பற்றிஎரிந்து, ஆன்மாக்களை நரகத்திக்கு இழுத்துச் செல்வது. அதுயாதெனில், சன்மார்க்கத்தை எதிர்த்து, துன்மார்க்கத்தை வளர்க்கும் நூல்களும், நிரீச்சுரவாத பிரசுரங்களுமாம்.

ஒருபித்தன் கடவுள் இல்லையென்று எழுதிவிட்டால், அவனைத்தான் சில தூர்த்தரும, அறிவிலிகளும், பெருந்தீரன், அறிஞன், ஞானி, முன்னேற்றத்தின் தீபம் என்று போற்றுவார்கள். இன்னொருவன் தூயகற்புக்குப் பாதகமான, குடும்ப சீவியத்துக்கு விரோதமான, நாற்றம் நிறைந்த இளிவான, காமவிசாரம் தேங்கிய புத்தகங்களை, அசுசியான, அருவருப்பான கதைகளை எழுதி அச்சேற்றிவிட்டால், அவனைத்தான் துணிவும், தேற்றமும், ஏற்றமும், முற்போக்கு முடைய ஏதுவாதியென வணங்கிப் புகழ்வார்கள் பலர்.

இந்த ஆபத்தான, பயங்கரமான நிலைபரத்தில் கத்தோலிக்க பெற்றோரினதும், எழுத்தாளரினதும் கடமையாது? கண்மூடித் தூங்குவதா? அன்றேல் விழிப்புடன் கடுஞ்சமர் ஆடுவதா? சமர் புரிய ஓர்மம் வேண்டும். மேலும், ஆயுதம் வேண்டும். அதற்கு எங்கட்கு வேண்டிய ஆயுதங்கள்

(7-ம் பக்கம் பார்க்க)



திருச்சபையினதும்
2-ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தினதும்
பாதுகாவலர்.

### பாப்பரசர் போலாந்து கருதினலுடன் காட்சியளித்தார்

சம்பேதுரு சதுக்கத்தில் நின்ற 10,000 யாத்திரிகர்களுக்குக் காட்சிதரும் நோக்கத்துடன் தமது அறையின் பலகணிக்குச் சென்ற அருளப்ப பாப்பரசர், தம்முடன் போலாந்து அதிமேற்றிராணியார் கருதினல் விஷின்ஸ்கியையும் அழைத்துச் சென்ருர். இருவருக்கும் ஆர்ப்பரித்து வாழ்த்துக்கூறினர் மக்கள்.

அருளப்ப பாப்பரசர் தெரியப்பட்டபின் கருதினலவர்கள் ரோமைக்கு விஜயஞ்செய்தது இதுவே முதல்முறையாகும். பாப்புவைத் தரிசித்ததுடன் வத்திக்கான்சங்க மத்திய ஆயத்தக்குழுக்கூட்டங்களுக்கும் சமூகமளித்தார்.

## "2-வது வத்திக்கான் பொதுச்சங்கத்திற்காகச் செபியுங்கள்"

எதிரேவரும் 2-வது வத்திக்கான் பொதுச்சங்கத்தின் சித்திக்காகக் கத்தோலிக்க மக்களனைவரும் விசேஷ விதமாக மன்றாட வேண்டுமென்று பரிசுத்த பாப்பரசர் அண்மையில் விடுத்த ஓர் நிருபமூலம் கேட்டுள்ளார்

குருக்களும், திருமந்திரமாலை என்னும் கட்டளைச செபத்தை நாள்தோறும் செபிக்கக் கடமைப்பட்டோரும், தங்கள் நாளாந்த கட்டளைச் செபங்களைப் பொதுச் சங்கத்தின் சித்திக்காக மிகுந்த உருக்கத்துடன் ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று பரிசுத்த தந்தை கேட்டுள்ளார். "திவ்விய பூசைப் பலிக்கு அடுத்த மிகச் சிறந்த பொதுச் செபம் குருக்கள் சொல்லும் கட்டளைச் செபங்களே. ஆகவே, இவ்வுன்னத செபங்களை எதிரேவரும் பொதுச்சங்கத்தின் ஆயத்தத்திற்காகவும், சித்திக்காகவும் சருவேசுரனுக்குச் சிறப்பாக அர்ப்பணிக்கப்பட்டவர்களிடமிருந்து கேட்க முன்வந்துள்ளோம்" என்று பாப்பரசர் அக்கடிதத்தில் கூறுகின்ருர்.

சாதாரண கிறிஸ்தவர்களும் பாப்பரசரின் இவ்வேண்டுகோளில் இடம் பெறுகின்றனர். இல்லறத்தாரில் பலர் குருமார் சொல்லிவரும் கட்டளைச் செபத்தைத் தாமும் தினந்தோறும் சொல்லி வருகின்றனர். இவ்வழக்கத்தைப் பாப்பரசர் பெரிதும் பாராட்டி, அச்செபங்களைப் பொதுச்சங்கத்தின் சித்திக்காகச் செபித்துவரும்படி கேட்டுள்ளார். கட்டளைச் செபங்களைச் சொல்லும் வழக்கம் இல்லாத சாதாரண கிறிஸ்தவர்களிடம் செபமாலையைத் தினந்தோறும் அதே கருத்துக்காகச் சொல்லி வரும்படி பரிசுத்த தந்தை கேட்டுள்ளார்.

கட்டளைச்செபத்தையோ, செபமாலையையோ தொடங்குமுன் பின்வரும் செபத்தையும் சொல்லும்படியும் கேட்டுள்ளார். "ஆண்டவராகிய தேவனே, 2-ம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் நனி சித்திக்காக உமது தெய்விக மகத்துவத்திற்கு அடியேன் ஒப்புக்கொடுக்கும் இப்புகழ்ச்சிப் பலி உமக்கு உவப்பாக இருக்கக் கடவது. எமது பரிசுத்ததந்தையாகிய அருளப்பருடன் சேர்ந்து நாங்கள் தாழ்மையாய்க் கேட்பதை உமது இரக்கத்தால் சித்திகரமாகக் கண்டடையத் தயை செய்தருளும். ஆமென். இந்தச் செபத்தைச் சொல்லும் ஒவ்வொரு முறையும் 500நாள் பலனையும், தினந்தோறும் சொல்லி வந்தால் மாதத்திலொருமுறை வழக்கமான நிபந்தனைகளின்படி ஒரு பரிபூரண பலனையும் அடைந்து கொள்ளலாம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

"எமது இந்த வேண்டுகோளை உலகம் முழுவதும் சந்தோஷமாய் ஏற்று நிறைவேற்றுமென்று நாம் நம்பியிருக்கின்ருேம். இது உலகத்தின எல்லாப் பாகங்களிலும் வாழும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் இப்பெரும் சங்கத்தின் சித்திக்கு ஒவ்வொருவரும் தங்களாலியன்ற உதவி செய்யுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளேயாகும்" என்று பாப்பரசர் முடிவில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிகோணமலை மேற்றிராணி ஆண்டவரின் தபசுகால நிருபம்

## 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம்

இந்த வருடத்தின் பெரும் நிகழ்ச்சி — சிலர் சொல்லுமாப்போல் மகா பெரும் நிகழ்ச்சி — 2-ம் வத்திக்கான் பொதுச் சங்கமே என்பதில் ஐயமில்லை. பரிசுத்த பாப்பரசர், 23-ம் அருளப்பர், சம்பேதுருவானவரின் சிம்மாசனத்தில் அமர்ந்த காலந்தொடங்கி, இந்தப் பொதுச்சங்கத்தைக் கூட்டுவிப்பதே அவரது கரிசனையாயிருந்தது. பாப்பரசர் தேர்தல் பெற்றதும், மேற்றிராணிமார் வேதசாஸ்திரிகள் சேர்ந்த ஒரு குழுவை அகில உலக முழுவதிலுமிருந்து தேர்ந்தெடுத்து, இப்பொதுச் சங்கத்துக்குத் தயார் செய்யும்படி கட்டளையிட்டார். இரண்டு வருட காலத்துக்கு மேலாக இந்த ஆரம்பக் குழு ஆயத்தம்செய்து வந்திருக்கிறது. அதே வேளையில் பரிசுத்த பாப்பரசரும், இந்தச் சங்கத்தின் சித்திக்காக நம்மையும் ஊக்குவித்து வந்துள்ளார். பாப்பரசரின் பகிரங்க பேச்சுகளிலும், தனிச் சந்திப்புகளிலும் இச்சங்கத்தைப் பற்றிய பேச்சுத்தான் துலங்குகிறது. இச்சங்கத்தின் அனுகூலத்துக்காகச் செபத்தையும் தாமே இயற்றி அதைச் சொல்லிவருமாறு அனைவரையும் வற்புறுத்துகிறார்.

பரிசுத்த பாப்பரசர் சென்ற மார்கழி மாதம் 15-ம் திகதியன்று "மானிட ஈடேற்றத்தின் இரட்சகர்" என்ற விசேஷ கட்டளைப் பத்திரத்தைப் பிரசித்தப்படுத்தி, 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தை உத்தியோக பூர்வமாகக் கூட்டியுள்ளார்:— "இப்பொழுது, பரிசுத்த ரோமைத் திருச்சபையின் நமது சகோதர கருதினல்மாருடைய கருத்துக்களையும் ஆராய்ந்து, நம்முடைய நாயகன் யேசுக்கிறிஸ்துநாதருடையவும், நம்முடையவும் அதிகாரத்துடன், இந்த 1962-ம் ஆண்டில், பரம பிதாவின் பராமரிப்பின் சித்தம் தரும் நாளில், 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தை, வத்திக்கான் மகா பெரும் ஆலயத்தில் கூட்டுவிப்போம்." இப்போ இந்த நாளும் ஐப்பசி மாதம் 11-ந் திகதி, பரிசுத்த கன்னிமரியம்மாளின் தேவதாய்மைத் திருநாளுக்கு நியமனம் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் நாம், இந்த வருட தபசுகால நிருபத்தை, இப்பொதுச் சங்கத்தின் சித்திக்காகவே அர்ப்பணம்செய்வது சரியென்று, சகலரும் ஒத்துக்கொள்வார்கள்.

### பொதுச் சங்கம் என்றால் என்ன ?

"திருச்சபையின் மதம், ஒழுக்க முறை, முதலியவைகளை ஆராய்ந்து தீர்மானிக்கும் பொருட்டு, முழு உலகத்திலுமுள்ள மேற்றிராணிமார், வேதசாஸ்திரிகள், நிபுணர்கள் பாப்புவினால் அழைக்கப்பட்டு ஒன்றாக அவருடைய தலைமையின்கீழ் சங்கம் கூடுவதே பொதுச்சங்கமாகும்" சர்வலோகத்திலுமுள்ள திருச்சபையின் விசுவாசம், பழக்கவழக்கங்களைப்பற்றி ஆராய்வதே அதன் நோக்கமாகும். ஆகவே, அகில உலகிலுமுள்ள மேற்றிராணிமார்கள் பாப்புவுடன் ஒரு பொதுச்சங்கத்துக்காக ஒன்று சேரும்பொழுது, இஸ்பிரீத்துசாந்துவானவர் விசேஷ விதமாய்த் தமது கொடைகளை அவர்கள்மேல் பொழிந்தருளுவார். இதன் நிமித்தமே பொதுச்சங்கத்தின் சட்டங்கள் வழுவாவரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. கிறிஸ்துநாதரும் இந்த உதவியைத் திருச்சபைக்குவாக்குப்பண்ணியிருக்கிறார். (மத். 28 : 19) (அரு. 16 : 13).

### பொதுச் சங்கங்கள் கூடுவதன் காரணம் :

பல முகாந்தரங்களையுமிட்டுப் பொதுச்சங்கங்கள் கூடலாம். திருச்சபையின் போதனைக்கு முரண் அல்லது மதபேதமிருக்கலாம். சிலவேளை காலிக நவீனங்களின் நிமித்தம், பழக்க வழக்க முறைகளைப்பற்றி சில அறிவு ஊட்டுவதற்காகவாயிருக்கலாம். அல்லது, சட்டமுறையோ, தேவவழிபாட்டு முறையோ, திருச்சபையில் திருத்தவேண்டிய முகாந்தரமிருக்கலாம். இப்படியாக முழுத்திருச்சபையின் பூரண ஆரோக்கியத்துக்கு அசௌக்கியம் ஏற்படும் வேளையில், உத்தியோகபூர்வமாகத் திருச்சபையில் பொதுச்சங்கம் கூட்டப்பட்டு, வழுவாவரத்துடன், தீர்ப்புகள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இப்படியாகக் கடைசிமுறை திருச்சபையில் நடைபெற்றது 1-வது வத்திக்கான் பொதுச்சங்கமாகும். 1869-ம் ஆண்டு, மார்கழி மாதம் 8-ந் திகதி, இச்சங்கம் முதன்முறை கூடி ஆரம்பித்தது.



ஆனால், 1870-ம் ஆண்டு ஆரம்பமான யுத்தமொன்று அதைத் தொடர்ந்து நடத்த முரணாயிருந்தது. பரிசுத்த பாப்பரசர், தமது சிம்மாசனத்திலிருந்து தலைமை வகித்து, விசுவாசம் பழக்க வழக்க முறைபற்றிப் பேசும்பொழுது வழுவாவரத்தைக் கொண்டிருக்கிறாரென்று இந்த 1-ம் வத்திக்கான் பொதுச்சங்கமே தீர்ப்புச் சொல்லி முடிந்தது.

### 2-ம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் நோக்கம் :

"மானிட ஈடேற்றத்தின் இரட்சகர்" என்ற விசேஷ கட்டளைப் பத்திரத்தில், பரிசுத்த பாப்பரசர், தாம் கூட்டுவிக்க இருக்கும் பொதுச்சங்கத்திற்குரிய முகாந்தரங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். உலகம் ஒரு புது யுகத்தில் புகும் இவ்வேளை திருச்சபையிலும் பாரதூரமான சில கடமைகள் சுமைகின்றன. உலகம் பொருளாதாரத் துறையில் முன்னேறியுள்ள போதிலும், ஒழுக்கத்திலும் சம அளவாக முன்னேறவில்லை. இயந்திர சாதனங்கள் மனிதனுக்குத் தரக்கூடிய இன்பங்களை ஆராய்ந்து தேடுவதால் ஆன்மசம்பந்த ஆவல் அருகிவிட்டது. சிலர் பரமதேவனின் உதவியில்லாமல் ஓர் உலக ஆட்சியை அமைக்க விரும்புவார்கள். திருச்சபையோ தற்காலம் மிகவும் ஆன்ம சக்தியுடைய தாய் விளங்குகிறது. [illegible] ஆர்வமுள்ள குருப்பிரசாதிகளும், விசுவாசிகளும் திருச்சபையில் தற்காலம் துலங்குகிறார்கள். அத்துடன், மேற்றிராணிமார், குருக்கள், விசுவாசிகள்ஏனையோருடைய விசுவாச அறிக்கையினாலும், அதற்குச் சாட்சியாகப் பாடுகளைப் பட்டுவருவதினாலும், திருச்சபை அதிகம் நன்மை அடைகிறது. இந்தக் கால வேதசாட்சிகளும், திருச்சபையின் சரித்திரத்திலுள்ள பேர்போன காலங்களுக்குக் குறைவாகவில்லை.

மேலும் விஞ்ஞானமும், இயந்திர சாதனங்களும் உலகில் பெருகியது, நமக்கு ஈடேற்ற படிப்பினைகளையும் படிப்பிக்கிறதெனக் கூறுகிறார் பரிசுத்த பாப்பரசர். உலகத்தை அழிக்கக்கூடிய தத்துவங்களைக் கொண்டவர்திருக்கிறது தற்கால விஞ்ஞானத்தின் முன்னேற்றம். இச்சந்தர்ப்பம் மானிடரை ஆழ்ந்த சிந்தனைக்கும், சமாதான ஆவலுக்கும் கொண்டுவந்து, ஆன்மசம்பந்த ஆவலையும் அருட்டியிருக்கிறது. ஆகையால், "கத்தோலிக்க திருச்சபைக்கும், அகில உலகத்திற்கும், கடந்த 20 மகா பொதுச்சங்கங்களுக்குத் தொடர்பாகவும் மேலதிகமாகவும், ஒரு புதிய பொதுச்சங்கத்தை அளிப்பதற்கு காலம் அண்மிவிட்டது" என்கிறார் பரிசுத்த பாப்பரசர்.

2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம், திருச்சபையின் ஐக்கியத்தை ஸ்திரப்படுத்தி, சத்தியத்தைப் பரப்பி, அதன் அங்கத்தவர்களில் சாங்கோபாங்கத்தையும் வளர்த்துவிடும். சத்திய வேதாகமம், பாரம்பரியம், தேவதிரவிய அனுமானங்கள், செபவழிபாடு, திருச்சபையின் சட்டங்கள், பிறர்சிநேக பண்பாடுகள், விசுவாசிகளின் அப்போஸ்தலத்துவம், வேதபோதக நாடுகளின் வளர்ச்சி முதலியனவே இப்பொதுச் சங்கத்தின் காரியகருமங்களாகும். இப்படியாகப் போதனையிலும் சாதனையிலும் பிறர்சிநேகத்தை வளர்த்து, கிறிஸ்துநாதர் கருதிய ஐக்கியத்தை நிலைநாட்டுவிக்கும். ஈற்றில் புதிய குழப்பங்களால் கவலையில் ஆழ்ந்திருக்கும் உலகம், சமாதானத்தைப்பற்றி எண்ணுவதற்கு இவ்வத்திக்கான் சங்கம் அரியதோர் சந்தர்ப்பத்தை அளிக்கின்றது, எனக்கூறி நிற்கிறார் பரிசுத்த பாப்பரசர்.

'மானிட ஈடேற்றத்தின் இரட்சகர்' என்ற விசேஷ கட்டளைப் பத்திரத்தின் சாரத்தை நாம் ஆராய்ந்த பிரகாரம், இந்தச் சங்கத்தின் நோக்கம், திருச்சபையைச் சம்பாவிலு எபேசியருக்கு எழுதிக் காட்டிய வண்ணம் விளங்கச் செய்வதே எனலாம்: "கிறிஸ்துநாதர் ஜீவவாக்கியத்தைக்கொண்டு ஜல ஞானஸ்நானத்தால் அதைச் சுத்திகரித்துப் பரிசுத்தமாகவும், கறை திரை இவை முதலியவைகள் ஒன்றுமில்லாமல், அர்ச்சிக்கப்பட்டதும், மாசற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் துலங்கப் பண்ணவும் தம்மைத் தாம் கையளித்தாரே" (எபே. 5 : 25—27). சர்வேசுரன் திருச்சபைக்கு அளித்திருக்கிற சகல சந்தர்ப்பங்களையும் உபயோகித்து, திருச்சபை ஓர் உகந்த இரட்சணியப் பேழையாகத் துலங்கப் பண்ணுவதே இச்சங்கம் செய்யும் அரும்பெரும் வேலையாயிருக்கும். திருச்சபைக்கு அளிக்கப்பட்டிருக்கும் பரம சத்திய வெளிப்படுத்துதல்களை அதி நுணுக்கமாகப் பரவச்செய்யும். திருச்சபையிலுள்ள சகல கூட்டங்களையும் அதி உன்னதமும் ஊக்கமுமுள்ளதாக்கும். இப்படியாகத் திருச்சபையானது, கலக்கமுற்றுக் கலங்கி நிற்கும்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

தாண்டவன்வெளியில்

## கத்தோலிக்க சங்கத்தின் வருடாந்த கூட்டம்

மட்டக்களப்பு, தாண்டவன்வெளி விசாரணைப்பங்கை, பங்குக்குரவருடன் சேர்ந்து, காத்துநடத்திவரும், தாண்டவன்வெளிக் கத்தோலிக்க சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த புதன்கிழமை மாலை சதா சகாயமாதா ஆராதனையின்பின் 6-30 மணியளவில் பங்குக் குரவர் இல்லத்தில் ஆரம்பமானது.

கூட்ட ஆரம்பத்தில் கடந்தகாலத்திலே அரிய சேவைகளைச்செய்ய தன்னுடன் உதவியாயிருந்த சங்கத்தினர் அனைவருக்கும் தலைவர் அவர்களால் நன்றிகூறப்பட்டது. பின் காரியதரிசி, தனதிகாரர் கடந்த ஆண்டறிக்கைகளை முறையே சமர்ப்பித்தனர். தொடர்ந்து, "இன்று அரசாங்கம் பாடசாலைகளை எடுத்தபின், பாடசாலைகளில்போதிக்கும் சமயபோதனை போதாது; ஆகையால், நாம் நம்பங்கில் மரியாயின் சேனையினரால், வாரம்தோறும் நடாத்தப்படும், ஞானோபதேச வகுப்புகளுக்கு, வேண்டிய உதவிசெய்து, பிள்ளைகளை வீடுவீடாகச்சென்று வரவழைத்து மேலும் உச்சநிலைக்குக் கொண்டுவர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்" எனத் தீர்மானிக்கப்பட்டது. பின்வருவோர் புதுவருட சங்க உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். ஞானத்தலைவர்: கட்டளைக்குரு வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியார், போஷகர்: திரு. எஸ். எம். தியோபிளஸ், தலைவர்: திரு. எஸ். சவரிராஜா, உபதலைவர்: திரு. எம். கமிலஸ், காரியதரிசி: திரு. எஸ். இ. அந்தோனி, உபகாரியதரிசி: திரு. எஸ். இராசேந்திரம், தனதிகாரர்: திரு. எஸ். தவராசா.

ஈற்றில் கட்டளைக்குரவர் தம் உரையில்: "நீங்கள் இவ்வருடம் சமயபாட சம்பந்தமாகக் கொண்டிருக்கும் உற்சாகம் மிகவும் வரவேற்கத்தக்கது. பிள்ளைகளுக்கு மாத்திரமல்லாமல், நான் கூடியவிரைவில் இப்பங்கில் பெற்றோருக்கும் ஒரு வகுப்பை ஒழுங்குசெய்வேன். ஏனெனில், ஞானோபதேச வகுப்போடு பிள்ளைகளின் சமயபாடம் நிறுத்தப்படுவது இன்றையநிலையில் போதாது. எனவே அவர்களுக்குப் பெற்றோர் வீட்டிலும் சமயபாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும். அதற்குவேண்டிய அறிவையும், விளக்கத்தையும் குருக்கள் பெற்றோரது வகுப்புகளில் கொடுப்பார்கள். அதற்காக இவ்வகுப்புக்களுக்குப் பெற்றோரை வரவழைக்க நீங்கள் உதவியாய் இருக்கவேண்டும் என்றுகூறி, இப்பங்கில் நான்செய்யும் சேவைகளுக்கு நீங்கள்தான் எனக்கு உதவி, இப்பங்கு அடையும் புகழ் எனக்கல்ல உங்களுக்கே தான், எனவே புதுவருடத்திலும் உதவி செய்வீர்களென நம்புகிறேன்" என்றுகூறி முடித்து சங்கத்தினரையும் ஆசீர்வதித்தார், பின் கூட்டம் செபத்துடன் முடிவுற்றது.

—நிருபர்.

### நன்றித் துதி

பரிசுத்த சதாசகாய மாதாவினுடையவும், பதுவைப்பதியரான அர்ச். அந்தோனியாருடையவும் பெரும் புதுமையால், மனிதரால் செய்யமுடியாததும், கவலைக்கிடமானதுமாக இருந்த என் மகனின் பிறப்புப்பத்திரம் சரியாக்கப்பட்டதும், அவருக்கு உடனடியாகவே நிரந்தர அரசாங்க உத்தியோகமும் கிடைத்தது. இதை நன்றிஸ்துதியாக மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறேன்.

அடியாள் S. T. அன்னமேரி
"லில்லியன் லொட்ஜ்"
ஏழாலை கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## ஐஞ்ஞூறு பஸ்பாதைகள்

இலங்கைப் போக்குவரத்துச் சபை நடத்தும் பஸ்சேவைப்பாதைகளிலே 500 பாதைகளைத் தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்துவிடலாமென்று சபை சமர்ப்பித்த ஒருயோசனையை அரசாங்கம் இப்போது பரிசீலனைசெய்து வருகிறது. இவைகள் சபையின்பஸ்கள் ஓடும் மொத்தப்பாதைகளில் ஐந்திலொருபங்காகும். இவற்றிலே பிரதானபாதை எதுவும் அடங்கமாட்டாது.

## இளைப்பாறிய அதிபர்கள்

கல்விப்பகுதியிலே உதவிவித்தியாதிபர்களாகக் கடமையாற்றிய திரு. ஏ. வீரசிங்க, திரு. டி. ஏ. விஜயசிங்க, திரு. டி. ஜே. இராஜபத்திரான, திரு. ஜே. விக்கிரமசிங்க ஆகியநால்வரும் தங்கள் பதவிகளிலிருந்து இளைப்பாறியுள்ளனர். இவர்களின்வயது 57-க்கும், 59-க்கும் இடையிலாகும். சுகக்குறைவாலேயே இவர்கள் இளைப்பாறியதாகத் தெரிய வருகிறது.

## திகதி பின்போடப்பட்டது

பண்டாரநாயக்கா கொலைவழக்கிலே மரணதண்டனை விதிக்கப்பட்ட சோமராமதேரோவுக்கு அத்தண்டனை இம்மாதம் 7-ந்திகதியன்று நிறைவேற்றப்படவேண்டியது. அவருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை ஆட்சேபித்துப் பிறிவிகவுண்சிலுக்கு அப்பீல்செய்யப்பட விருப்பதைமுன்னிட்டு மரணதண்டனையை நிறைவேற்றும்தினம் சித்திரை 17-ந்திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

## ஏன் விலகினார்?

தலதாபனமந்திரி திரு. மகாநாம சமரவீரா சென்றவியாழக்கிழமை மாத்தறையிலே திறப்புவிழாவொன்றில் பேசிய போது: ''சேர் ஒலிவர் குணதிலக்கா அவர்கள் தற்போதைய சோஷலிச முறைக்கேற்பச் செயலாற்றக் கூடியவரல்ல; அதனாலேயே அவரிலும்பார்க்கத் திறமைவாய்ந்த ஒருவரிடம் பொறுப்பை விடுவதற்காக அவர் கவர்னர்-ஜெனறல்பதவியிலிருந்து இளைப்பாறும்படியாக நிர்ப்பந்திக்கப்பட்டனர்'' எனக் கூறியிருக்கின்றார்.

## வீட்டுவரியும் வரிமதிப்பும்

வீட்டுவரிசம்பந்தமாய்த் தற்போது செய்யப்பட்டுள்ள புதியமதிப்பானது சிலவருடங்களின் முன் செய்யப்பட்ட மதிப்பைக்காட்டிலும் அதிகமதிகம்ஏற்றமாயிருப்பதால் புதியமதிப்பு மக்களுக்குத் தாங்கமுடியாத பெருங்கஷ்டத்தை உண்டுபண்ணியுள்ளது; அதனால் எந்தக்கட்டடத்தினதும் புதியமதிப்பு முந்தியமதிப்பின் $33\frac{1}{3}$சதவிகிதத்திற்கு மேற்படாமல் இருக்கும்படி மாநகரசபைமுதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றபிரேரணை சென்றவெள்ளிக்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டத்தில் நிறைவேறியிருக்கிறது.

## தரைமட்டமான பாடசாலை

சென்ற மாசிமாதம் 2-ந்திகதியன்று வீசிய சூறாவளியின்வேகத்தால் அடித்துக்கொண்டுவிழுந்து தரைமட்டமான சாவனை, சின்னமடுப்பாடசாலை இன்னுமே திருத்தி அமைக்கப்படாது அந்தப்படியே இருந்துவருகிறது. அண்மையிலுள்ள சின்னமடுக்கோவிலிலே இப்போது அப்பாடசாலைவகுப்புகள் நடைபெறுகின்றன. அதனால் இப்பாடசாலையைத் திரும்பஅமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணை ஒன்று நாரந்தனைக் கிராமச்சங்க கூட்டத்தில் நிறைவேறியிருக்கிறது.

## கிராமசேவகர் நியமனம்

தற்போது இருந்துவரும் கிராமத் தலைமைக் காரருக்குப்பதில் வருகிற ஆவணி 1-ந்திகதியன்று 2,500 கிராம சேவகர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்களெல்லாம் வைகாசிதொடக்கம் மூன்றுமாதங்கள்வரை சமூகசேவையிலும், கிராமநிர்வாக வேலைகளிலும் பயிற்சிபெறுவார்கள்.

## நீதிபதிகளின்மாற்றம்

கொழும்பு, கூட்டுமாவட்ட நீதிபதியான திரு. ஏ. எல். டி கிறெற்சர் அவர்கள் மாவட்டநீதிபதியாக யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறார். இவர் பதவியேற்றபின் விடுமுறையில் சென்றமையால் சாவகச்சேரி மாவட்ட நீதிபதியான திரு. என். சிவபாதசுந்தரம்அவர்கள் யாழ்ப்பாணமாவட்ட தற்காலநீதிபதியாகக் கடமையாற்றுகின்றார்.

## பிள்ளைகளுக்குப் பஸ்

பாடசாலைப் பிள்ளைகளுக்கென்று பிரத்தியேகமான பஸ்சேவைஒன்று சென்ற 7-ந்திகதி புதன்கிழமை ஆரம்பமாகியிருக்கிறது. இதனைப் போக்குவரத்துச்சபை காங்கேசன்துறைக்கும், யாழ்ப்பாணத்துக்குமிடையே நடத்துகிறது. காலை 7-30மணிக்குக் காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், பிற்பகல் 3-30மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறைக்கும் பாடசாலைப்பிள்ளைகளை இந்தப் பிரத்தியேகபஸ் ஏற்றியிறக்குகிறது.

## தேர்தல் ஆட்சேப மனுக்கள்

பாராளுமன்ற தேர்தல் ஆட்சேப மனுக்கள் அந்தந்தத் தேர்தல் சம்பந்தப்பட்ட தொகுதிகளிலுள்ள நீதிமன்றங்களிலே விசாரணைசெய்யப்படவிருக்கின்றன. ஒரு தொகுதியில் நீதிமன்றம் இல்லாவிட்டால் அதற்குச் சமீபமான தொகுதியிலுள்ள நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறும். மொத்தமாகப் 13 தேர்தல் ஆட்சேப மனுக்கள் விசாரணைசெய்யப்படவிருக்கின்றன.

## பிறிவிக்கவுண்சில் அப்பீல்

அப்பீல்செய்ய லீவுகேட்கும் மனு பிறிவிக்கவுண்சில் முன்பாக விசாரணை செய்யப்படும்போது பண்டாரநாயக்கா கொலைவழக்கிலே குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ள முதல்இரண்டு எதிரிகளுக்காகவும் திரு. ஈ. ஜி. விக்கிரமநாயக்கா, கியூ.சி. நியாயவாதியாக ஏற்படுவாரென லண்டனிலிருந்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாம் ஆளான சோமராம தேரோவுக்காக ஏற்படும் நியாயவாதியைப்பற்றி இன்னும் ஒரு தீர்மானமும் எடுக்கப்படவில்லையாம்.

## லொறி-மோட்டர்சைக்கிள் விபத்து

காங்கேசன்துறையைச்சேர்ந்த 33 வயதுடைய தம்பு சர்வானந்தாவும், தொண்டமானாற்றைச்சேர்ந்த 27வயதுடைய ஜெயசிங்கம் இராசனும் சென்றசனிக்கிழமை கரணவாய் வீதியிலே ஒருமோட்டர்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த லொறியுடன் மோதியமையாலே இருவரும் அந்தஇடத்திலேயே மரணமடைந்தார்கள். மரணமான இருவரது முகங்களும் காயமுற்று முற்றாக விகாரமடைந்ததுடன் அவர்களின் உடல்களிலும் பெரும்முறிவுகள் காணப்பட்டனவாம். லொறியின்சாரதியான சுன்னாகத்தைச்சேர்ந்த நாகநாதன் மாணிக்கம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

## தமிழாசிரியர் நியமனம்

தான் மந்திரிபதவியை ஏற்றுக் கொண்டபின் 150பேருக்குமேற்பட்ட தமிழாசிரியர்களைப் பாடசாலைகளிலே நியமனஞ்செய்திருப்பதாகக் கல்விமந்திரி தெரிவித்திருக்கிறார். ஆனால், பாடசாலைகளிலே 306தமிழாசிரியர்களின் ஸ்தானங்கள் காலியாயிருக்கும் இந்தவேளை 172பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள் வேலையற்றிருப்பதாகப் பயிற்சிபெற்று வேலையற்றிருக்கும் ஆசிரியர்சங்கம் கல்விமந்திரிக்கு முறையீடுசெய்திருக்கிறது.

## பேராசிரியரின் எச்சரிக்கை

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரிப் பெற்றார் தினவிழாவில் இலங்கைச் சர்வகலாசாலைத் தமிழ்த் துறைப்பகுதிப் பேராசிரியர் கலாநிதி எஸ். வித்தியானந்தன் அவர்கள்பேசிய போது: ''கொந்தளிக்கும்கடலிலே தத்தளிக்கும் மாலுமியைப்போன்று இன்றைய குழப்பமான கல்விச்சூழ்நிலையில் மாணவஉலகம் பெரிதும் சங்கடப்படுகிறது; அரசியல்பலிபீடத்தில் கல்வியைப் பலியிடும்நிலையிலே மாணவரும், பெற்றோரும் கவனமாயிருக்க வேண்டு''மென்று எச்சரித்திருக்கிறார்.

## ஒரேபாடையில் இருவரும்

நுணாவில்கிழக்கு வாசிகளான மு. கந்தையாவும், அவர்மனைவி முத்தம்மாவும் செல்லச்சந்நிதிக்குப் போகும் வழியிலே இவர்கள்சென்றகார் விபத்திக்குள்ளாகவே இருவரும் உயிர்துறந்தனர். சென்றவெள்ளிக்கிழமை இருவரின்பிரேதங்களும் ஒரேபாடையில் கொண்டுசென்று ஒரேகட்டையில் தீமூட்டப்பட்டன. இவர்களுடன் சென்ற ஏழுவயதுப்பாலியன் தேவாதீனமாக உயிர்பிழைத்துக்கொண்டான்.

## திரு. ஏ. அருளம்பலம் காலஞ்சென்றார்

யாழ்ப்பாணம், கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் அதிபரும், யாழ்ப்பாண ஐக்கிய மாகாண வங்கித்தலைவரும், வட இலங்கைக் கூட்டுறவு மேற்பார்வைச் சபைக் காரியதரிசியும், யாழ்ப்பாணத்திலிருந்து மாதந்தோறும் வெளிவருகின்ற ''ஐக்கிய தீபம்'' என்ற கூட்டுறவுவெளியீட்டின் ஆசிரியரும், பிரக்கிராசியாருமான திரு. ஏ. அருளம்பலம்அவர்கள் சென்றவியாழக்கிழமைபிற்பகல் காலஞ்சென்ற துயரசெய்தியை அறியவந்து மனம்வருந்தலானோம். யாழ்ப்பாணத்திலே கூட்டுறவுக்காக நெடுங்காலம் அயராதுழைத்துவந்த இவரின் தொண்டுகள் என்றென்றும் மறக்கற்பாலனவன்று.

## அடித்துக்கொண்டு விழுந்தது

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஒருபகுதியானது சென்றவெள்ளிக்கிழமை உடற்பயிற்சி செய்துகொண்டிருந்த மாணவிகள்மீது அடித்துக்கொண்டு வீழ்ந்தமையால் ஒருஆசிரியையும், இருமாணவிகளும் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். ஆசிரியையான திருமதி குணமணி காலில்முறிவு கண்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலிருந்து பின் யாழ்ப்பாணஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார். கல்லூரியின் இந்தப்பிரிவு முன்னர் அநேகமுறைகளில் தீமூட்டி எரிக்கப்பட்டதாகும். ஏழாலைதெற்கு அமெரிக்கமிஷன் பாடசாலையும் சென்ற 7-ந்திகதி நடுச்சாமத்திலே தீக்கிரையாயிற்று. இது [illegible] சதியென்றே கருதப்படுகிறது.

## வெளிநாட்டுச் செய்திகள்

● அமெரிக்கஜனாதிபதியின் பாரியார் தனதுஇளையசகோதரியான லீ ருட்சீவில் இளவரசிசமேதராய் இந்தியாவுக்கு வரும்வழியிலே சென்ற ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான்மாளிகைசென்று அருளப்பபாப்பரசரின் பேட்டிபெற்று, தனதுகணவனார் எழுதிய அரியநூல்ஒன்றை அவருக்கு அன்பளிப்புச் செய்யலாயினர்.

* * *

● சோவியற்ருஷியாவுக்கும், அமெரிக்காவுக்குமிடையே விஞ்ஞான தொழில்நுட்பம், கல்வி, கலாசாரம் முதலியதுறைகளில் நெருங்கியதொடர்புக்கு வழிகோலும் உடன்படிக்கை ஒன்று வாஷிங்ரன்நகரிலே சென்ற 8-ந்திகதியன்று கையொப்பமிடப்பட்டுள்ளது. இருவருடகாலம் இது நடைமுறையில் இருந்துவரும்.

* * *

● அமெரிக்கஜனாதிபதி கென்னடி அவர்களே ஐக்கியஅமெரிக்கதேச சரித்திரத்தில் ''அதிகம்சிறந்தமாதிரியாய் உடைதரித்துள்ள ஜனாதிபதி'' யெனச் சென்றவியாழக்கிழமைகூடிய அமெரிக்க தையற்காரர்சங்கம் வர்ணித்திருக்கிறது. அமெரிக்கஅரசாங்கத்திலும் அதிகம்நல்லமாதிரியாய் உடைதரிப்பவரும் அவரே என்பது அச்சங்கத்தின்கருத்தாகும்.

* * *

● ஆண்களுக்கு அதிகம்சாதாரணமாய் ஏற்படும்புற்றுநோய் சிகறெற் புகைக்கிறவர்களுக்கே ஏற்படுகிறதென்று லண்டன்நகரிலே வைத்திய கலைஞர்களின் றோயல்கல்லூரித்தலைவர் சேர்றொபேட் பிளாற் தெரிவித்திருக்கிறார். பிரித்தானியிலே சென்ற வருடம் இருதயப்புற்றுநோயால் 20,000பேருக்குமேல் இறந்திருப்பதாக அவர்தெரிவித்துள்ளார்.

* * *

● அமெரிக்கா நாற்பதுகோடி டலர் பெறுமதியான உணவுப்பொருட்களைப் பஞ்சத்தால்வாடும் செஞ்சீன மக்களுக்குக் கொடுத்துதவ வேண்டுமென்று நோபல்பரிசுபெற்ற பேர்ள் பக்என்ற ஆசிரியை அமெரிக்கஜனாதிபதி கென்னடியைக் கேட்டிருக்கின்றார். இந்தஉதவி அமெரிக்காவிடமிருந்து வருகிறதென்பதை வறுமையால்வாடும் சீனமக்கள் உணரச்செய்ய வேண்டுமென்பது அவரின்கருத்தாகும்.

## அவசரகாலநிலைமை

இலங்கையிலே அவசரகாலநிலைமை மேலும் ஒருமாசகாலத்துக்கு நீடிக்கச் செய்து விடப்பட்டிருப்பதாகச் சென்ற 8-ந் திகதி 'கெசற்' விளம்பரமூலம் கவர்னர்-ஜெனறல் பிரசித்தஞ்செய்திருக்கின்றார்.

## உப்புப் பஞ்சம்

உப்புஏராளமாக விளைகின்ற யாழ்ப்பாணத்திலே இப்போது உப்புப்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. தெல்லிப்பழை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை, பளை முதலாம் பலவிடங்களிலும் உப்புக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கூடியவிலைகொடுத்தபோதிலும் மக்கள் அதைப்பெறமுடியாதநிலையில் கஷ்டப்படுகின்றார்கள்.

## பஸ்-லொறிமோதின

கொழும்பிலிருந்து சென்றஞாயிறன்றுபிற்பகல் கண்டியைநோக்கிச் சென்றுகொண்டிருந்த இ. போ. சபைப் பஸ்ஒன்று லொறிஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதால் 2பேர் காயமடைந்தனர். இவர்களில் ஆறுபேர் படுமோசமாகக் காயமடைந்து அபாயகரமானநிலையிலே ஆஸ்பத்திரி கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டனர். பஸ்ஸின்சாரதியும் காயமடைந்தவர்களில் ஒருவர். இரு வாகனங்களும் பெருஞ் சேதமடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வாசினையும் கத்தோலிக்கர் கடமையும்

## II

சென்ற இதழில் நல்வாசினையின் அர்த்தம் எடுத்து—விசேஷமாகக் கத்தோலிக்கருக்கு—விளக்கப்பட்டது. சுருங்கக்கூறின் சர்வேசுரன் மனிதனை எதற்காகச் சிருட்டித்தாரோ, அதற்கு நல்வாசினை அத்தியாவசியம் என்பது உண்மையே. சர்வேசுரனை **அறிந்து, நேசித்து, சேவிக்கவும்** அதனால் **மோட்சத்தை அடையவும்** நல்வாசினை அத்தியாவசியம். சர்வேசுரனை அறிவதற்கு, அவருடைய தன்மையைப் பூரணமாக விளங்குவதற்கு, வேதாகம அறிவு அத்தியாவசியம். ஒருவரை அறியாமல் அவரை நாம் நேசிக்கமுடியாது என்பது எவரும் அறிந்த உண்மையே. ஆகவே, தேவனைப்பற்றியும், அவரது திவ்விய குமாரனைப்பற்றியும், அத்திவ்விய குமாரன் எவ்வாறு மக்களை மீட்க மானிடஅவதாரம் செய்தார் என்பதைப்பற்றியும், மன்னுயிரை மீட்கத் தன்னுயிரையீந்த அவருடைய கல்வாரிப்பலியைப் பற்றியும், அவர் மக்களது ஈடேற்றத்திற்காக ஸ்தாபித்த கத்தோலிக்க திருச்சபையைப்பற்றியும், அவர் ஏற்படுத்திய தேவதிரவிய அனுமானங்களைப்பற்றியும் ஆழமாக அறியாத ஒருவன் உண்மையான கத்தோலிக்கனாய் இருக்க முடியாது. அன்பு அறிவில் இருந்து பிறக்கிறது. திராட்சரசத்தின் தன்மையை அறிந்தவர்களுக்கு, அதன் ருசியைச் சுவைத்தவர்களுக்குத்தான் அதில் ஆசை ஏற்படும். உணவுகளைப் பொறுத்தமட்டிலும் அறிவில் இருந்துதான் ஆசைபிறக்கிறது என்பது உண்மையே. கத்தோலிக்கர் தேவனைப்பற்றிய அறிவையும், வேதத்தைப்பற்றிய அறிவையும் அறிதல் இரு நோக்கங்களையுடையது எனக்குறிப்பிடலாம். அவையாவன: தனிநோக்கம், பொதுநோக்கம் என்பனவாம்.

தனிப்பட்டமுறையில் நாம் தேவனை ஆராதிக்கவும், அவரை நேசிக்கவும், அவரைச் சேவிக்கவும் இவற்றின்மூலம் மோட்சசம்பாவனையைப்பெறவும் சமய அறிவு உதவுகிறது.

பொதுப்பட்ட முறையில் ஆராயப்புகின் ஒரு கத்தோலிக்கன் தான் தொண்டுபுரியும் காரியாலயத்திலோ, அங்கத்துவம் வகிக்கும் வரியிறுப்போர் சங்கத்திலோ, அன்றேல் வேறுசங்கங்களிலோ (உதாரணமாகப் பெற்றோர் சங்கம், கிராமமுன்னேற்றச் சங்கம் முதலியன) அல்லது அவன் தன்ஓய்வு நேரத்தைச் செலவிடும் வாசிகசாலையிலோ, விளையாட்டிடங்களிலோ, பொழுதுபோக்கு ஸ்தாபனங்களிலோ அல்லது அவன் கொடுக்கல் வாங்கல் செய்யும் வர்த்தகநிலையங்கள் போன்ற இடங்களிலோ, அவன் பலபிறசமயத்தவர்களோடு பழகவேண்டியவனாய் இருக்கிறான். தனது அன்றாட வாழ்க்கையில் ஒரு கத்தோலிக்கனின் முக்கிய பண்பு, உண்மை அல்லது சத்தியம். எவ்விடத்திலும் எல்லோர்மத்தியிலும் **உண்மையை எடுத்து விளக்குவது, அதை நிலைநாட்டுவது,** அவனது கடமையாகவிருக்கிறது. இதைச் செவ்வனே செய்வதற்கு உண்மையான கடவுளையும், அவருடைய கற்பனைகளையும், அவருடைய போதகங்களையும் நன்கு அறிந்திருத்தல்வேண்டும். உள்ளதை உள்ளவாறு எடுத்துக் கூறுவதற்கு உண்மையான சமயஅறிவு அவசியம்.

நல்வாசினைஞாயிறு ஒரு வருடத்தில் ஒருநாளாக இருந்தாலும் அது ஒரு கத்தோலிக்கனின் வாழ்க்கையின் நாளாந்த அம்சமாக அமையவேண்டும். கத்தோலிக்க நூல்களை, சஞ்சிகைகளை, பத்திரிகைகளைக் கிரமமாக வாங்கி, அவற்றை வாசித்து அதனால் பலனடைய எல்லாக் கத்தோலிக்கரும் முயற்சிசெய்ய வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்என்பதை எடுத்து விளக்குவதே நல்வாசினை ஞாயிறின் முக்கிய நோக்கமாகும். நன்மைக்கோ தீமைக்கோ, நமது தற்கால உலகம் நூல்கள்நிறைந்த உலகமாகக் காட்சியளிக்கிறது. கல்வியோ உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் தீவிரமாய்ப் பாவிச்செல்கிறது. அநேகர் தமது நேரத்தில் ஒருபகுதியை வாசிப்பதில் செலவிடுகிறார்கள். ஆனால், உலகம் சில இடங்களில் "அப்பத்தைக் கேட்கிறவர்களுக்குக் கல்லைக் கொடுக்கிறது போல்" பேரின்பவாழ்க்கைக்குப் பதிலாகச் சிற்றின்ப சீவியத்திற்கு ஏற்ற, மிகவும் துவேஷத்திற்குரிய, அருவருப்பான நூல்களை ஆயிரக்கணக்கில் பரப்பி வருகிறது. அநேக மக்களும் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்கிறவர்கள்போல் ஆகிறார்கள். உண்மை அறிவைப் பெறுகிறதற்குப் பதிலாக அருவருப்பான அபிலாசையூட்டும் விஷமான நூல்களை வீணாக வாசித்துத் தமக்கும் பிறருக்கும் அளப்பரிய தீமையை வருவிக்கின்றனர். ஆகவே, ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பத்திலும் அக்குடும்பத்திலுள்ளவர்களின் வயதிற்கேற்றவாறு ஒரு கத்தோலிக்க வாசிகசாலை நிறுவப்படுதல்வேண்டும். ஒவ்வோர் கத்தோலிக்க குடும்பமும் கத்தோலிக்க நூல்நிலையமாக மாறவேண்டும் அங்கு கத்தோலிக்க நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் இடம்பெறவேண்டும். ஒவ்வொரு விசாரணைப்பங்கிலும் ஒரு கத்தோலிக்க வாசிகசாலையும், நூல்நிலையமும் நிறுவப்படவேண்டும். அங்கு பலவிதமான வேதவெளியீடுகள் அப்பங்கில் உள்ள எல்லோரும் வாசிக்கத்தக்க விதமாக இடம்பெறவேண்டும். இதைவிடப் பொதுஸ்தாபனங்களாகிய வைத்தியசாலை, வயோதிபசாலை, அநாதைசாலை, மறியற்சாலை ஆகிய இடங்களுக்குக் கத்தோலிக்க நூல்களையும், பத்திரிகைகளையும் விநியோகிக்கும் பணியில் தருமசபைப் பங்குகளில் அங்கத்துவம்வகிக்கும் கத்தோலிக்கர் ஈடுபடலாம்.

பொதுவாகக் கத்தோலிக்கர் சில சாக்குப்போக்குகளைக் கூறி நல்வாசினையை அலட்சியம் செய்கிறார்கள். அவர்கள் கூறும் சில காரணங்கள் பின்வருமாறு:

**முதலாவது** "எங்களிடம் கத்தோலிக்க நூல்களை வாங்கப் பணமில்லை."

**இரண்டாவது** "அவற்றை வாசிக்க எமக்கு நேரமில்லை."

**மூன்றாவது** "அவைகளை வாசிப்பதால் எங்களுக்கு அதிகம் பிரயோசனம் இல்லை."

உணவு, உடை, லௌகிக சம்பந்தமான பொருட்களைக் கைக்காசுக்கோ, கடன்பட்டோ வாங்குவதற்குப் பின்நிற்பதில்லை. ஆனால், தேவனைப்பற்றிய, அவருடைய திருச்சபையைப்பற்றிய நூல்களை வாங்குவதற்குத்தான் பணம் இல்லை. தினசரிப்பத்திரிகைகள் வாங்கப் பணமுண்டு. ஆனால், வாரந்தோறும் வெளிவரும் வேதப்பத்திரிகைகளை வாங்குவதற்குத்தான் பணமில்லை. ஆபாச நூல்களை வாங்குவதற்குப் பணமுண்டு. ஆனால், ஆத்மீக வளர்ச்சிக்குரிய நூல்களைவாங்கப் பணமில்லை.

சினிமாப் படம் பார்க்க நேரமுண்டு, உல்லாச சுற்றுப்பிரயாணத்திற்குப்போக நேரமுண்டு. பிறர்செய்கிற—செய்[illegible] பற்றிச் சல்லா[illegible] பொழுதுபோக்கு நிலையங்களில் நண்பருடன் கூடிமகிழ நேரமுண்டு. ஆனால், நமது ஆண்டவருடனும் தேவதாயாருடனும், சுத்தவாளர்களுடனும் ஞானவாசினைமூலம் சல்லாபிக்க—பொழுதுபோக்க எமக்குச் சொற்பமும் நேரமில்லை. ஆ! எவ்வளவு பரிதாபமான நிலை!

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்று ஒரு பெரிய புலவர் கூறியிருக்க சமயநூல்களை வாசிப்பதால் ஒருபயனும் இல்லைஎன்று கூறுவது எவ்வளவு தப்பறையான ஒரு கூற்று. இது ஒன்றில் அகங்காரத்தால் அல்லது அறியாமையால் பிறக்கும் எண்ணம் என்றே கூறவேண்டும். "மனமுண்டானால் இடமுண்டு" என்ற கொள்கைக்கு ஏற்ப வேதவிசுவாசம் நிரம்பிய எவரும் தனக்குக் கத்தோலிக்க நூல்களையோ, சஞ்சிகைகளையோ, பத்திரிகைகளையோ வாங்கி வாசிப்பதற்குப் பணம், நேரம், பயன் இல்லை என்று ஒருபோதும் கூறமாட்டார்.

கத்தோலிக்க இலக்கியத்தின் மகத்துவத்தைப்பற்றிப் பல பெரியார்கள் காலத்திற்குக்காலம் எடுத்துக்கூறி விளக்கியிருக்கின்றனர். பிரபல்யம் வாய்ந்த 13-ம் சிங்கராய பாப்பரசர் "ஒரு கத்தோலிக்க பத்திரிகையை அனுதின ஞானவொடுக்கம்" என்று குறிப்பிடுகிறார். 11-ம் பத்திநாதர் "கத்தோலிக்க அச்சகத்திற்குச் செய்யும் தொண்டு எதையும் எனக்குத் தனிப்பட்ட முறையில் செய்ததாக எண்ணுகிறேன்" என்று வெளிப்படுத்தியுள்ளார். இன்னும் ஓர் எழுத்தாளர் "கத்தோலிக்க குடும்பங்களில் நாளாந்த ஜெபமாலைஒதுதல் எவ்வளவு விரும்பத்தக்கதோ அவ்வளவிற்கு நாளாந்த ஞானவாசினையும் விரும்பத்தக்கது" என்று குறிப்பிடுகிறார். "கத்தோலிக்க இலக்கியம் எட்டாவது தேவதிரவிய அனுமானம்" என்று இன்னொருஎழுத்தாளர் இடித்துரைக்கிறார்.

சென்றவாரம் வெளிவந்த கதலிக் மெசெஞ்சர் [3-3-62] பத்திரிகையில் காலஞ்சென்ற உயர்திரு. ஜே. பி. டி. பொன்சேகா, காலஞ்சென்ற உயர்திரு. குயின்ரஸ் டெவில்கான், தற்போது கத்தோலிக்க ஆங்கில எழுத்தாளர்களாக இலங்கையில் திகழும் திரு. வேர்ணன் லோறன்ஸ், திரு. டக்ளஸ் ஜோன்ஸ், திரு. வி. மெல்டர், திரு. டபிள்யூ. எல். எஸ். கந்தப்பா என்பவர்கள் கத்தோலிக்க இலக்கியத்தின்பெருமையை ஆங்கிலத்தில் மிகவும் தெளிவாக எடுத்து விளக்கியிருக்கின்றனர். ஆங்கிலம் கற்றோர் அதை வாசித்தால் அரும் பயன் பெறுவர் என்பது நமது நம்பிக்கை.

கத்தோலிக்கரைப் பொறுத்த மட்டில் நல்வாசினை ஞாயிறைத் திறம்பட அனுசரிப்பதற்கு வழிவகைகள்சிலஉள. அவற்றைச் சுருங்கக்கூறின்,

**முதலாவது:** தங்கள் இல்லங்களில் அநேக வேதநூல்களையும், கத்தோலிக்க சேவை, இருதயநாதன், சத்தியசுடர், சர்வவியாபி, தேன் ஒலி, ஞானதூதன் போன்ற சஞ்சிகைகளையும், பலவித துண்டுப்பிரசுரங்களையும், 1876-ம் ஆண்டுதொடக்கம் வாரந்தோறும் வெளியிடப்பட்டுவரும் **சத்திய வேத பாதுகாவலனையும்** பெற்று ஒரு குடும்ப வாசிகசாலையை நிறுவ முயற்சிசெய்தல். ஆங்கிலம் கற்றவர்கள் 1869-ம் ஆண்டுதொடக்கம் வெளியிடப்பட்டுவரும் கதலிக் மெசெஞ்சர் என்ற வாரப் பத்திரிகையையும் பெறுதல்.

**இரண்டாவது:** கத்தோலிக்கர் தாம் வாசித்த பழைய நூல்களோ, [illegible]களையோ, தமது பிறசமய சிநேகிதர்களுக்கு அல்லது பொது ஸ்தாபனங்களாகிய வைத்தியசாலை, வயோதிபசாலை, அநாதைசாலை, மறியல் சாலைக்கு அனுப்பிவைத்தல்.

**மூன்றாவது:** ஒவ்வொரு விசாரணைப்பங்கிலும் அப் பங்குக்குருவும், அப்பங்குக் கத்தோலிக்கரும் சேர்ந்து ஒரு கத்தோலிக்க வாசிகசாலையை நிறுவுதல். ஒவ்வொரு ஞாயிறுதோறும் நூல்களை விற்பனைசெய்ய முன்வருதல்.

**நான்காவது:** ஒவ்வொரு கத்தோலிக்கனும் தன் விசாரணைப்பங்கு இலக்கிய சங்கத்தின் அங்கத்தவனாகவோ அன்றேல் தனிப்பட்ட முறையிலோ சிறுநூல்களை எழுதுதல் அல்லது கத்தோலிக்க சஞ்சிகைகளுக்கு விஷயதானம் செய்தல்.

**ஐந்தாவது:** சில கத்தோலிக்கர் சேர்ந்து அச்சகங்களைநிறுவி கத்தோலிக்க நூல்களையும், பிரசுரங்களையும் அச்சேற்றி வெளியிடுதல்.

**ஆறாவது:** சில கத்தோலிக்கர் தங்களால் இயன்றமட்டில் தனிப்பட்ட முறையிலோ அல்லது கத்தோலிக்க சேவாசங்கங்களாகியமரியாயின்|சேனை, தருமசபைப்பங்குகள் மூலமோ, கத்தோலிக்க நூல்களையும் வெளியீடுகளையும் விற்பனை செய்யவோ அல்லது இலவசவிநியோகம் செய்யவோ முன்வருதல்.

**ஈற்றில்:** சிலகத்தோலிக்கர் தங்கள் செலவில வேத வெளியீடுகளை வெளிப்படுத்தி அவற்றை இலவசமாக விநியோகம்செய்ய முன்வரல்.

மேற்கூறியவாறு ஒவ்வொரு கத்தோலிக்கனும் முயற்சி செய்வானாகில் இவ்வாண்டு நடைபெறவிருக்கும் நல்வாசினைஞாயிறு—அளப்பரிய நன்மை செய்யும் என்பது சொல்லாமலே விளங்கும்.

— பி. சவரிமுத்து


## இந்திய கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| திருஇருதய நவநாள் ... | 25 |
| உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவி நவநாள் ... | 35 |
| அர்ச். சூசையப்பர் ... | 55 |
| நல்லொழுக்கம் ... | 60 |
| தாழ்ச்சிக் கண்ணாடி ... | 75 |
| புதினன்மைப் பட்டத்திட்டம் ... | 90 |
| கன்னியர் ஒழுக்கம் ... | 1-00 |
| இறைவற சல்லாபம் ... | 1-00 |
| யேசுவின் சிறிய புஷ்பம் ... | 1-10 |
| அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரம் ... | 1-10 |
| என்பலி (சங்கீதத்துடன்) ... | 1-25 |
| சத்திய வேதாகம சங்ஷேபம் பழையஏற்பாடு & புதியஏற்பாடு | 1-35 |
| வேதாகமசரித்திரம் பழைய வேதம் | 1-40 |
| வேதாகமசரித்திரம் புதிய வேதம் | 1-40 |
| அன்புக்கன்பு ... | 1-50 |
| லீலிமலர் (அல்லது)கற்பெனும் பரிசுத்த புண்ணியம் ... | 1-55 |
| செந்துகில் (அர்ச். மரியகொறெற்றியின் வாழ்க்கைச்சித்திரம்) ... | 1-60 |
| செந்துகில் ... | 1-65 |
| உத்தரிக்கிற ஆத்துமாக்களின் வணக்கமாதம் ... | 1-65 |
| திக்கற்ற தையல் ... | 2-00 |
| இன்பத்திலும் துன்பத்திலும் ... | 2-00 |
| இயேசுநாதர் (அன்பின் அரசர்) ... | 2-25 |
| மலரோ மணமோ ... | 2-50 |
| வாழ்விக்கும் வள்ளல் ... | 2-50 |
| தன்னைக் கையளித்தல் ... | 2-60 |
| மன்ரேசா ... | 2-75 |
| வாழ்க்கையில் வழிகாட்டி ... | 2-75 |
| ஞானச்சீவியம் ... | 3-25 |
| கிறீஸ்துநாதர் அனுசாரம் ... | 3-25 |
| பங்கிராஸ் ... | 3-50 |
| ஞானோபதேசக் கோர்வை (முதலாம் பாகம்) ... | 3-50 |
| (இரண்டாம் பாகம்) ... | 3-50 |
| (மூன்றாம் பாகம்) ... | 3-50 |
| திருக்குடும்ப பக்திமாலை ... | 4-00 |
| சத்தியவேத சித்திரவிளக்கம் ... | 5-50 |
| பிரதாப முதலியார் சரித்திரம் ... | 6-00 |
| பரிசுத்த வேதாகமம் (ம. பதிப்பு) | 12-00 |
| Devotion to St. Joseph's (Eng.) | 40 |

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நசரேத்தின் நறுமலர்



யெருசலேம் தேவாலயத்திலே ஏகப்பட்டகூட்டம். அதுதான் கன்னிகையான மரியாயின் சுயம்வரம். தேவாலயத்தின் இராஜகுருவின் திருவுளப்படி யெருசலேம் நகரின் பிரதானிகளும், சிற்றரசர்களும் கன்னி மரியைக்கரம்பற்ற ஆலயத்தில் கூடியுள்ளனர். இந்தத் திருமணத்தைப் பார்க்கப்பெருங்கூட்டம் கூடியுள்ளது.

திருமணத்துக்குமுன், மணவாளன் தெரிவு நடைபெறவேண்டும். இளவல்கள் எல்லோரும் தமக்குள்ளே யார்தான் மரியாளின் கரம்பற்றப் போகின்றனோ என்று ஆவலுடன் அமர்ந்துள்ளனர். அப்பொழுதுதான் இராஜ குருப்பிரசாதி சபைநடுவேவந்து தேவ திருவுளத்தை அறிய அங்கிருந்த இளவல்களுக்கு ஒவ்வோர் காய்ந்த கோல்களைக் கொடுத்து, "இத்தமரக்கிளைகளில் எது நறுமலர் பூக்கிறதோ அந்தக் கிளையைத்தாங்கியுள்ளவரே மரியாயின் மணவாளனுவார்" என்றுகூறி பிரார்த்தனையைத் தொடக்கினூர். வானத்திலேபிரகாசம், இஸ்பிரீத்துசாந்து வானவர் நிழலிட தாவீதின் கோத்திரத்தில்உதித்த சூசையின் கரத்திலிருந்த கிளையில் நறுமணம்வீசும்மலர் மலர்ந்தது. உத்தமனும் நீதிமானுமான சூசையே மரியாளைக் கரம்பற்றி அவளின் துணைவனுனூர்.

திருமணம் நடந்த அந்த நேரத்தில் வளனான சூசைக்கு தான் உலகஇரட்சகரான யேசுவுக்கு வளர்ப்புத் தந்தையாகப்போகிறூர் என்பதை அறிந்திருக்கவேயில்லை. அவர் தேவஏவுதலினுல், தேவதூதனுன கபிரியேலினுல் கன்னி மரியாயின் கருப்பத்தைப்பற்றி அறிவிக்கப்படுமளவும் இந்தப்பரம இரகசியத்தை அறிந்திருக்கவே இல்லை. விரத்தனுகவாழ வேண்டுமென்று விரதம் பூண்டிருந்தவளனுர் கன்னிமரியாயின் திருஉதரத்தில் கருவான கடவுளின் அற்புதச்செயலை அறியாது நிலைதடுமாறிக் கலங்கினுலும் தேவசித்தத்தை அறிந்தபின்னர் எவ்வளவு பிரமாணிக்கமாயிருந்தார் என்பதை விபரிக்கவே முடியாது.

கன்னிசுத்தம் கெடாதமரியையும், அவள் பெற்றெடுத்த கனியாகிய யேசுவையும் பாதுகாக்கவும், வளர்க்கவும் தெரிந்து கொள்ளப்படுவதற்கு சூசையப்பர் எப்பேர்ப்பட்ட தூய்மையும், தேவநேசமும் உடையவராய் இருந்திருக்கவேண்டும். தேவதாயாருக்கு அடுத்தாற்போல மனிதருள் மாணிக்கமாக, மலர்களில் நறுமணம் கமழும் இராஜலீலியாகத்தானே அவர் திகழ்ந்திருக்க வேண்டும். அற்பமும் மாசிலலாத தேவதாயையும், சர்வவல்லபமுள்ளவரும் பரிசுத்ததனத்தின் ஊற்றுமாகிய தேவன் மானிடனுகிய போது அவரைப் பேணி ஆதரிக்க தகுதியுடைய ஒரேயொரு ஆண்மகன் சூசைமாதவத்தோனுகவே இருந்தான்.

தேவசுதன் பிறந்த நேரமுதல் கடைசியாக தாம் மரணமடையும்வரை சூசையப்பர் எவ்வளவு கவனமாகவும், மட்டற்ற தாழ்ச்சியுடனும் அவரையும். தேவஅன்னையையும் பராமரித்தார், தேவகுழந்தையான இரட்சகருக்கு ஏற்பட்ட ஆபத்துக்களில் எல்லாம் அவரைக் காப்பாற்ற அவர் எவ்வளவு கஷ்டப்பட்டார். தேவசித்தம் இது தான்என்று அறிந்தவுடன், பிரமாணிக்கத்துடனும், பொறுமையுடனும், தைரியத்துடனும் அதை நிறைவேற்றினூர்.

உயர்ந்த கோத்திரத்திலே, அரச பரம்பரையிலே உதித்த சூசையப்பர், அதையிட்டுப் பெருமையும் மேட்டிமையும் கெம்பீரமும் காட்டவில்லை; குலப்பெருமை பேசவில்லை. தாழ்மையும், பொறுமையும் உடையவராய் விளங்கினூர். தரித்திரத்தை நேசித்தார். உலகமக்களுக்கு விசேஷமாய் குடும்பத்தலைவர்களுக்கு உத்தமமாதிரிகையாய் வாழ்ந்து காட்டினூர். வறியவராய் இருந்தும் தச்சுத்தொழில் செய்து குடும்பத்தைத் தாபரித்தார். தனது துணைவியையும் தனது பாதுகாப்பில் வைக்கப்பட்ட குழந்தையேசுவையும் நன்றாக நேசித்தார். கஷ்டப்பட்டு உழைத்து ஊதியத்தைத் தேடினூர்.

சூசையப்பர் தம்மைப்பற்றிப் பெருமைபாராட்டிக் கொள்ளாது மறைந்த வாழ்க்கை நடத்தியமையால், அவர் எங்கே பிறந்தார், எங்கே மரித்தார் என்பதுகூட ஒருவருக்கும் நிச்சயமாகத் தெரியாது. ஆனுல், பெத்லகேமில்தான் அவர் பிறந்திருக்கவேண்டும் என்றும் நசரேத்தில் மரித்தார் என்பதும் பாரம்பரியத்தில் இருந்து அறியப்படுகிறது. சூசைமாதவன் யேசுவைத் தேவாலயத்தில் கண்டடைந்த பின்னர் சுவிசேஷம் அவரைப்பற்றி வேறு ஒன்றும் கூறுவதில்லை. சூசையப்பர் யேசுநாதரின் பிரசித்தசீவியத்துக்கு முன்னரே மரணமானூர் என்பது பாரம்பரியமாய் இருந்துவரும் நம்பிக்கை. யேசுநாதர் சிலுவையில் மாணித்தபோது சூசையப்பர் உயிரோடிருந்திருக்கமாட்டார். ஏனெனில், சூசையப்பர் இருந்திருந்தால், யுவானியாரிடம் தேவதாயாரைப் பராமரிக்கும் பொறுப்பைச்சுமத்தியிருக்கமாட்டார்.

யேசுநாதரின் கரங்களிலே மாணிக்கப்பாக்கியம் பெற்றமையால் தான் சூசையப்பர் நல்மரணமடைபவர்களின் பாதுகாவலர்என அழைக்கப்படுகிறூர். பரிசுத்ததந்தை ஒன்பதாம் பத்திநாதர் அர்ச். சூசையப்பரை முழுத்திருச்சபைக்கும் பாதுகாவலராக ஏற்படுத்தினூர். அதனுல் பரிசுத்தசீவியத்துக்கு அவர் பாதுகாவலராகினூர்.

மனிதன் மோட்சமடைவதற்கு பரிசுத்ததனமே திறவுகோலாகும். அப்பேர்ப்பட்ட பரிசுத்ததனத்துக்கு மாதிரிகையாய் இருப்பவர் சூசையப்பர். திருச்சபைத்தாய் தன்பிள்ளைகள் எல்லோரும் பரிசுத்ததனத்தையடையவும், நல்மரணப்பேறு பெறவும் வேண்டுமென்று ஆசிப்பதனுல் அர்ச். சூசையப்பர்மேலே அதிகபக்திகொள்ளும்படி எல்லோரையும் தூண்டுகிறது. இதன் காரணமாகவே பங்குனிமாதத்தை அர்ச். சூசையப்பரின் வணக்கமாதமாக ஏற்படுத்தியிருக்கிறது. முன்னர் வழங்கிய கிரேக்கபழமொழியொன்றை சூசையப்பருடன் தொடர்புறுத்தி எமது ஆன்ம நன்மைகளுக்காகச் "சூசையப்பரிடம் செல்லுவோம்." பங்குனிமாதத்தில் இந்த வாக்கியத்தை நினைவுகூர்ந்து, அவருடைய திருநாளைக் கொண்டாடும்பொழுது, பாவிகளான எமக்கு அர்ச். சூசையப்பர் மோட்சசம்பாவனையைப் பெற்றுத்தருவார் என்பதில் ஐயமில்லை. கிறிஸ்தவ சாங்கோபாங்கம்வளர, குடும்பங்களில் ஒற்றுமையும் சமாதானமும் நிலவ, உழைப்பின் உயர்வை எல்லோரும் உணர, குடும்பத்தலைவர்கள் தம் பொறுப்பைச்சரிவரச் சிந்தித்துவாழ அர்ச். சூசையப்ப[illegible] பின்பற்றவே[illegible] அவரது திரு நாளைக் கொண்டாடும்பொழுது, இந்த [illegible] வேண்டுவோமாக.

எஸ். எம். ஜே.


வெளிவந்துவிட்டது விற்பனைக்கிருக்கின்றது

## சிலுவைப்பாதைச் சிந்தனைகள்

சருவேசுரனுடைய நன்மைத்தனத்தையும், திவ்விய மீட்பரின் பாடுகளையும், உடன் இரட்சகியான தேவதாயாரின் வியாகுலங்களையும், நமது நன்றிகேட்டையும் தியானித்துச் செபிக்க நம்மைத் தூண்டிநிற்கும் புதுமை நூல்.

கல்வாரிப் பாதையில் நம் இரட்சகருடனும், தேவதாயாருடனும் நம்மை அழைத்துச்சென்று, ஒவ்வொரு கோரக் காட்சியையும் சொற் சித்திரமாய் வரைந்துகாட்டும் சிறந்த நூல்,

ஞானச் சீவியத்தில் முன்னேறிச் செல்ல விரும்புவோருக்கும், சோதனையிலும், வேதனையிலும் தத்தளித்துத் தயங்குவோருக்கும் தைரியம் தரும் அருமருந்தன்ன அமுது நூல்.

இன்ப துன்பங்களில் இணைபிரியாது, எம்மைக் கலங்கித்தவிக்க விடாது மனிதராய் வாழ நற்றுணை எனவரும் நன்னூல்.

சிறியார், பெரியார், ஆசிரியர், கன்னியர், சந்நியாசிகள், குருமார் எப்போது வெளிவருமென அவாவுடன் இதுவரை எதிர்பார்த்திருந்த ஒப்பற்ற ஓவிய நூல்.

மகா மேன்மை தங்கிய மேற்றிராணி ஆண்டவர் அவர்களின் நன்மதிப்பையும், மனப்பூர்வமான ஆசியையும் பெற்று, உயரிய சிந்தனைகளை எப்போதும் எந்நேரமும் நிரம்பத்தரும் இன்ப நூல்.

**விலை பிரதி ஒன்று சதம் 75.**

**(தபாற்செலவு பிரத்தியேகம்)**

தபாற்செலவு உட்படத் தனிப்பிரதிக்குத் 90 சத முத்திரையும், மூன்று பிரதிகட்கு 2 ரூபா 50 சதமும், ஆறு பிரதிகட்கு 5-00 ரூபாவும், ஒரு டசினுக்குப் 10-00 ரூபாவும் பெறுமதியான Postal Order அல்லது Money Order அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

V. P. P. ஓடருக்குப் பெறுமதியில் அரைவாசி முற்பணம் அனுப்பிப் பின்வரும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**ரி. ஏ. எவ். இராசையா,** இளைப்பாறும் ஆசிரியர், ஊகர்ாவற்றுறை. (அல்லது) **Rev. Fr. S. A. Gnanapragasam,** Parish Priest, Kayts.



## சத்தியவேத பாதுகாவலன்

**சந்தா விபரம்**

**வருட சந்தா**

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 6-00 |
| வெளி நாடுகள் | ,, | 6-50 |
| தனிப்பிரதி | சதம் | 12 |

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்த ஸ்தோத்திரம் ... | 2-00 |
| ஓடர்நிசி (Order Nisi) இரு முறைக்கு ... | 10-00 |

மற்றும் விபரங்களுக்குக் கடிதமூலமாகவோ அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக் கொள்ளவும்.

**மனேஜர்,**

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம், யாழ்ப்பாணம்.


பாலகி ஜெஸிந்தாவின்

## பிரிவு ஞாபகம்

தோற்றம்: **16-12-1957**
மறைவு: **17- 3-1961**

அரும்பில் மணந்து, எம் அன்பைக் கவர்ந்து அரும்பிலே கொய்யப்பட்ட எம் அருமந்த பாலகி ஜெஸிந்தா பொன்னுத்துரை இம்மண்ணினின்று விண்ணுக்கெடுக்கப்பட்ட நினைவுநாள் நிகழும் மாதம் 17-ம் நாள் என்பதை ஆற்றவொண்ணுத் துயருடன் அறிவிக்கும், நேயமார் பெற்றோர்,

**X. P. புஷ்பராஜ் பொன்னுத்துரை**
**I. நல்லம்மாள் பொன்னுத்துரை**

328, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை)



## நன்மரண ஞாபகம்

**எம். எஸ். இம்மனுவேல்**

ஜனனம்: **31-1-1900**
மரணம்: **20-3-1961**

அருள் சுரந்த தந்தையாய், அன்பு மிகும்
கணவராய், எங்கள் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறாய், எமதுயர்வுப்
பயிருக்கு மழையாய் வாழ்ந்தீர்!
பரதவிக்க எமை விட்டுப் பரகதியை நீர்
நாடிப் பறந்து, இன்று [ளத்தில்
ஒரு வருடம்! ஆனுலும், உருகும் எமது
நிதம் உயிர் வாழ்கின்றீர்!

பிரிவு தாங்காது வாடும் மனைவி:
**மேரி திரேசா இம்மனுவேலும்,**

மக்கள்:
**கிறேஸ் பட்றீஷியா,**
**ருக்மணி லெற்றிஷியா,**
**ஜோசவ் செல்வரெத்தினம்,**
**ஸ்டெல்லா யூபிரேஷியா,**
**ஆஞ்செலோ அரியரெத்தினம்**
**கிறிஸ்ரி ஜெயரெத்தினம்**

ஆகியோரும்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### பங்குனி மாதம் — 1962

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | ஞா. | 1 | தபசுகாலத்தின் 2-ம் ஞாயிறு (வி. ம.) | ஊ |
| 19 | தி. | 1 | தேவமாதாவின் பத்தாவும் திருச்சபையின் பாது காவலருமான அர்ச். சூசையப்பர் (காலதினம் ஞா.) (வி. ம.) | வெ |
| 20 | செ. | | காலதினம் | ஊ |
| 21 | பு. | | காலதினம் (அர்ச். ஆசீர்வாதப்பர் ஞா.) | ஊ |
| 22 | வி. | | காலதினம் | ஊ |
| 23 | வெ. | | காலதினம் | ஊ |
| 24 | சனி | | காலதினம் (அர்ச். கபிரியேல் ஞா.) | ஊ |

சத்திய வேத
பாதுகாவலன்
1962-ம் ஆண்டு
பங்குனிமாதம் 18-ந்திகதி

## அச்சுப்பிரசுர வாரம்

நமது மேற்றிராசனத்திலே கத்தோலிக்க அச்சுப்பிரசுரவாரம் இன்று 18-ந்திகதி ஞாயிறுவாரம் ஆரம்பமாகின்றது. கத்தோலிக்க புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், மற்றும் பலவிதபிரசுரங்களைக் கத்தோலிக்கமக்களிடையே அதிகமதிகம் பரப்புவதற்கும், அவைகளைவாசிக்கும் நல்லபழக்கத்தை அவர்களிடையே அதிகமதிகம் வளர்ப்பதற்குமாக வேண்டிய முயற்சியெடுப்பதே இவ்வாரத்தின் விசேடநோக்கமாகும். அத்துடன் விசுவாசத்திற்கும், சன்மார்க்கத்திற்கும் விரோதமானகொள்கைகளைப் பரப்பும் புத்தகங்கள், பத்திரிகைகளை அவர்கள்மத்தியிலிருந்து ஒழிப்பதற்கும், அவர்களது இல்லங்களிலே நுழைந்துள்ள அத்தகைய தீயபிரசுரங்களைப் புறம்போக்குவதற்கும் முயற்சிஎடுக்கப்படும். கத்தோலிக்க பிரசுரங்களைப் பரப்புவதும் ஒருசிறந்த வேதபோதக அலுவல். இந்தநவீனநாகரீக காலத்திலே அச்சுப்பிரசுர அப்போஸ்தலத்துவம்இல்லாமல் பிறஅப்போஸ்தலஅலுவல்கள் செழித்துவளர்வதும், அதிகபயன்தருவதும் அசாத்தியமாகும்.

இன்றையஉலகில் மக்களின் மனநாட்டங்களையும், உளக்கருத்துகளையும் பண்படுத்துவதிலே அதிகம் சக்திவாய்ந்த சாதனங்கள் அச்சுப்பிரசுரங்களே. ஆனல், இன்று நாம் காண்பதென்ன? சன்மார்க்கக்கெடுதியும், கடவுள்பக்திக்கு இடறலுமான புத்தகங்களும், பத்திரிகைகளும், மற்றும்பிரசுரங்களும் புற்றீசல்கள்போன்று பலுகிப்பெருகிப் பரந்துகொண்டிருப்பதையே காண்கிறோம். இன்றுவெளிவரும்பிரசுரங்களிலே சிலவற்றைத்தவிர ஏனையவைகளெல்லாம் ஆபாசம்நிறைந்தவைகள். ஆன்மாவைக்கெடுத்துப் பரிநாசமாக்கும் நச்சுப்பொறிகள், மனிதரிடமிருந்து கடவுளின்தொடர்பைத்துண்டித்து, அவர்களை நாஸ்திகரும், லோகாயதருமாக்கும் கூரரிவாள்கள், பார்வைக்கு அவைகள் பலவர்ணப்படங்களுடன் பளபளப்பாயிருப்பினும் பாலியர்கள், கன்னியர்கள், வாலிபர்களின் மாசற்ற உளங்களைப் பாழாக்கும் தீயபிரசுரங்கள். அழிவின்பாதையிலே அவர்களைஇட்டுச்செல்லும் ஆபத்துநிறைந்த நடைபாதைகள். ஒழுக்கம் குறைந்தனவும், தவறுநிறைந்தனவுமான புத்தகங்களும், பத்திரிகைகளும், மற்றும்பிரசுரங்களும் காட்டுத்தீபோன்று பரந்துகொண்டிருக்கும் இக்காலத்திலே எதைப் படிப்பது? எதைத் தவிர்ப்பது? என்று தெரிந்து கொள்வதில் பெற்றோரும், பிள்ளைகளும் அதிகம் விழிப்பாய் இருக்கவேண்டும். தீய பிரசுரங்களால் விளையும் பயங்கர தீமைகளை மக்கள்உணராமலில்லை, உணர்ந்தும் அவைகளை விலக்கப் போதியமனேதிடமும், உணர்ச்சி வேகமும் அவர்களிடமில்லை.

எந்த ஒருநாட்டிலும் கம்யூனிஸ்தர்கள் நுழைவதற்குமுன் எப்போதுமே கையாளும் உபாயதந்திரம் என்ன? தங்களது நாஸ்திகமும், புரட்சிப்போக்குமுடைய புத்தகங்களையும், பத்திரிகைகளையும் அந்நாட்டில் அம்பாரமாகக் கொண்டுபோய்ப் புகுத்துவதே. அவைகள் புகுந்ததும் முன்னேடிகளாயிருந்து வேண்டியஅழிவுவேலைகளை ஆரம்பித்துவிடுகின்றன. அக்காலத்தில் சஞ்சோன்என்பவன் பலநூற்றுக்கணக்கான நரிகளைப்பிடித்து, அவற்றின்வால்களிலே பந்தங்களைக்கட்டிக்கொளுத்திப் பயிர்கள்நன்ருக விளைந்திருந்த பிலிஸ்தியரின் வயல்களிலே அவைகளைத்துரத்திவிட்டு அப்பயிர்களையெல்லாம் எரியூட்டிப் பரிநாசமாக்கிவிட்டதுபோல் கம்யூனிஸ்தர்களின் நாஸ்திகபிரசுரங்களும் வால்களிலே பந்தங்கள்கட்டிக் கொளுத்திவிட்ட நரிகளேபோன்று சனசமுதாயத்துள்புகுந்து கடவுட்பற்றை ஒழித்து, சன்மார்க்கத்தைக் கெடுத்துச் செய்துகொண்டுவருகின்ற பயங்கரதீமைகளோ பகருந்தரமன்று, "மதம் என்பது மக்களுக்கு அபின்" என்று நாஸ்திகமதங்கொண்டுள்ள கம்யூனிஸ்த பத்திரிகைகள், புத்தகங்கள் சனசமூகத்தின் மத்தியிலிருந்து கடவுள்பக்தியைமாத்திரமல்ல, தந்தைதாய், ஆசிரியன், குரு ஆதியோரில் மக்கள் கொண்டுள்ள பக்தியையும் குருட்டுப்பக்தியாக்கி விடுகின்றன. இவைகள்குன்றுவதே தற்கொலைகளும், படுகொலைகளும்; மற்றும்பாதகச் செயல்களும் இன்று தலையெடுக்கக் காரணமெனஅறிஞர்கள்சொன்னல் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. இவைகள்கக்கும் தீப்பொறிகளை ஈனம்விளைக்கும் தீயநச்சுப்பொறிகளாகமதித்து எச்சரிக்கையாக நடந்துகொள்ளாவிடின் ஆபத்தே ஆபத்து.

கத்தோலிக்க பத்திரிகைகள் நமதுஅரசியல்உரிமைகளையும், சமய உரிமைகளையும் நாடறியஎடுத்துக் காட்டிப் பாதுகாப்பதற்கும், கத்தோலிக்கபுத்தகங்களும், மற்றும் பிரசுரங்களும் வேதவிசுவாசத்தையும், தேவபக்தியையும், நல்லொழுக்கத்தையும், வளர்த்து நல்வழிப்படுத்துவதற்கும் எத்துணை ஆவசியகமென்பதை அறிவோம். ஆனல், கத்தோலிக்க சமூகத்தினதும், அதிலடங்கியுள்ள அனைவரினதும் இதயபூர்வமான ஆதரவின்றிக் கத்தோலிக்கபிரசுரங்கள் தங்கள் பாரிய கடமையை நிறைவேற்றமுடியாது என்பதை எல்லோரும் உணரவேண்டும்; எமது "சத்தியவேத பாதுகாவலன்" எமதுநாட்டிலுள்ள கத்தோலிக்க தமிழ்மக்களின் பத்திரிகையாகக் காட்சியளிக்கின்றது. ஆகவே, இது விசாரணைப்பங்குகள், கல்லூரிகள், கலாசாலைகள், பக்திச் சபைகள், வாசிகசாலைகள், குடும்பங்களிலெல்லாம் புகுந்து நன்மைசெய்யப் பிரயாசைப்படவேண்டும். நமதுவேதவிரோதிகள் காலத்தோறும் விடுக்கும் சவாலைஏற்று எதிர்த்துநின்று வாதாடப்போதிய அறிவைப் பெறவேண்டும். எதிர்கால சந்ததியினரான நமதுபிள்ளைகள் இளவயதிலிருந்தே கத்தோலிக்க புத்தகங்கள், பத்திரிகைகளைப் படித்துத் தேவபக்தியிலும், வேத அறிவிலும், சன்மார்க்கத்திலும், வளர்ந்துவரச் செய்யவேண்டும். ஆகவே, கத்தோலிக்கசேவையில் ஈடுபட்டிருக்கின்ற சகலரும் கத்தோலிக்க பிரசுரவாரம் வெற்றிகரமாக நடைபெறத் தங்களாலானமுயற்சி எடுப்பார்களெனக் காத்திருக்கின்றோம்.

# தபசுகாலத்தின் 2-ம் ஞாயிறு

—வண. மைக்கல் ரொட்ரிக்கோ சுவாமிகள்—
தமிழாக்கம்: தமிழ்க் கழகம், லங்காமாதா குருமடம், கண்டி.

**ஓ! எமது உண்மைக் காப்பாளனுகிய யேசுவே! எமது இருளில் ஒளியே, எமது சீவியத்தின் சூரியனே, எம்மைக் காத்துக்கொள்ளும்.**

கிறீஸ்துதான் எமது உண்மைக் காப்பாளன். ஏனெனில், அவர் அணுகமுடியாத வெளிச்சம். இருட்டானது, இவ்வெளிச்சத்தைக் காணவில்லை. தபசு செய்யும் இந்நாட்களில், கடவுள் மனித அவதாரம் எடுத்து எங்களுக்காக மரித்து மனிதசந்ததியை இரட்சித்ததையிட்டு நாம் சந்தோஷப்படுகிறோம். ஆனல் இப்பூரிப்பு, வல்லமைமிக்க தேவனை பலமற்றவராகவும், வல்லமைஎதுவும் இல்லாதவருமாக எண்ணுவதற்கு வழிவகுக்கக்கூடாது.

இந்நாட்களிலே, மிகவும் போற்றத்தக்கவிதமாக கிறிஸ்துவின் **மனிதத் தன்மை**பற்றி எழுதிவைத்த அர்ச். மத்தேயுவின் சுவிசேஷத்தில் இருந்து 17 முறைக்கு அதிகமாக வாசிப்போம். அதே அளவிற்கு, குருத்தோலை ஞாயிறு ஈறுக, கரைகாணு அன்புச் சமுத்திரமாகிய கிறிஸ்துவின் **கடவுட் தன்மையை** அற்புதமாக விளக்கிவைத்த அர்ச். அருளப்பரின் சுவிசேஷத்தில் இருந்து வாசிப்போம். இன்றைய பூசையின் பொருள் கிறிஸ்துநாதருடைய தெய்வீக வல்லபத்தின் ஓர் ஒளிக்கதிரைத் தெரிவிக்கின்றது. கிறிஸ்து மறுரூபமாய்ப் போனபோது அவருடைய உடைகளும், அவருடைய முகமும் சூரியனிலும் கூடிய அதிக பிரகாசமாய்த் துலங்கின. யேசு பிறந்தார், மரித்தார். ஆனல், உயிர்த்தெழுந்தார். காலச்சக்கரத்தைக் கடந்துவிட்டார். இனிமேல் மரிக்கவே மாட்டார். ஏனெனில், அவர் கடவுள். எனவே, யேசு எமது உண்மைக் காப்பாளர் என்று கூறுவதில் வியப்பெதுவுமில்லை.

### சபைச் செபம்

ஓ தேவனே! நாங்கள் முற்றும் பலவீனர் என்று அறிகிறீரே; எங்கள் சரீரம் எல்லாத்தீங்குகளில் நின்றும் காப்பாற்றப்படவும், எங்கள் மனம் சகல அசுத்த நினைவுகளில் நின்றும் நீங்கிப் பரிசுத்தமாகவும், தேவரீர் எங்களை உள்ளும் புறமும் காத்தருளும். தேவரீரோடு இஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்தில் சதாகாலமும் நித்திய சீவிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே ஆமென் யேசு.

### செபமும் போதகச் சடங்கும்

இந்துசமயத்தவனே, புத்தசமயத்தவனே, கிறிஸ்தவனே, எல்லோருமே, "தின்மையில் இருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்று மன்ருடுகிருர்கள். "மோட்சம்" என்பது எல்லோரையும் வாவழைக்கும் ஒருசொல். எந்தச் சமயமும் உலகத்திலே, ஏதோ பிழையிருக்கிறதென்றும், எமக்கு இரட்சணியம் தேவையென்றும் எண்ணுகின்றது.

செனமபாவம்தான் இந்த உலகிற்கு அழிவைக் கொண்டுவந்தது. **பிரவேச வாக்கியம்** கடவுளின் இரக்கத்தை வேண்டும் எல்லா மனிதரினதும் செபத்தை அறிவுறுத்துகிறது. பாவத்தில் நின்று இரட்சிக்கப்பட்ட நாம் திரும்பவும் ஏன் பழைய நிலைக்குச் செல்லவேண்டும். எனவேதான் அர்ச். பவுல் அப்போஸ்தலர் கூறுகிருர்: "உங்களில் ஒவ்வொருவரும் தத்தம் பாத்திரத்தைப் பரிசுத்தத்திலும் மரியாதையிலும் காப்பாற்ற அறிந்தவர்களாய்... தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, நமதாண்டவராகிய யேசுக்கிறிஸ்துவில் அர்ச்சியசிஷ்டதனத்திற்கே அழைத்திருக்கிருர். இன்றைய **படிக்கீதமும் நெடுங்கீதமும்** தின்மையினின்று எமது நீங்கலைப்பற்றியும், சனங்களது இரட்சணியத்தைப்பற்றியும், பாடுகின்றன. **சுவிசேஷம்:** மகிமையின் கடவுள் பட்டபாடுகள் எம்மை அங்கலாய்க்க வைக்கவல்ல, எமது அந்தரிப்பை நீக்குவதற்கேயுரியன என்று கூறுகிறது. பேதுருவானவர், யாகப்பர் யுவானியார் ஆகியவர்கள் கண்ட காட்சியைப்பற்றி தான் மரணத்தினின்று உயிர்க்குமட்டும் ஒருவருக்கும் கூறவேண்டாமென்று அவர்களை வேண்டுகிருர் யேசு. இப்போது கிறிஸ்து உயிர்த்துவிட்டார். ஆனல், நாம் அதைப்பற்றி ஒவ்வொரு மனிதனுக்கும் கூறினேமா? அன்றேல், எம்முடனேயே அவைகளை வைத்திருக்கிருேமா? பேதுரு, யாகப்பர், யுவானியார் என்னும் அப்போஸ்தலர்களுக்கு யேசு மறுரூபமானதைக் காணும் பாக்கியம் கிடைத்தது. ஏனெனில், ஜெத்சமெனித் தோட்டத்திலே அவர்களுக்கென கொடூரகாட்சி காத்திருந்தது— பாவச்சுமை தாங்கமுடியாது யேசுவின் சரீரத்திலிருந்து இரத்த வியர்வை சொரிந்தது. இத்தகைய காட்சிக்கு முன்னல் நாமும் அந்த அப்போஸ்தலர்களைப்போல் நிலைத்திருப்போமா? அன்றேல், விட்டுவிலகி ஓடிப்போவோமா? இவைகள்தான் இன்றைய சுவிசேஷத்திலிருந்து வரும் சிந்தனைகள்.

### நற்கருணைச் சடங்கு

உணர்ச்சி வேகம் மிகுந்த பேதுரு அப்போஸ்தலருடன் மற்ற இரு அப்போஸ்தலரும் அங்கு கிறிஸ்துநாதருடன் நிற்க விரும்பினர்கள்; நின்று தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். சிலநோத்துக்குள்ளாக எங்களது விசுவாசக் கண்களுக்கு ஒரு பெரிய அற்புதக் காட்சி அளிக்கப்படும். கிறிஸ்துநாதர் மறுரூபம் எடுப்பதல்ல— ஆனல், ஒரு சிறு அப்பம் தேவனின் வல்லமையினல் அவருடைய சரீரமாகவும், இரத்தமாகவும் மாறிப்போய்விடும். அவரே எமது பலமாய் இருந்தால் நாம் எப்படித் தளர்ச்சி அடைய முடியும். அவருடைய இரக்கமும், இரட்சிப்பும் எம்மை இரட்சணியத்திற்கும் ஆராதனைக்கும் வழிநடத்துவதாக.

தபசுகாலமானது, எப்படி உணவிலிருந்து நாம் எம்மை ஒறுக்கவேண்டுமோ, அப்படியே பாவத்திலிருந்தும் நாம் நம்மை ஒறுக்கவேண்டும் என நினைப்பூட்டுகிறது. கிறிஸ்துவின் வழியிலே நடப்பது சுலபமல்ல. ஆனல், அவருடைய வரப்பிரசாதத்தின் மூலம் அது முடியும். "எனது தேவனே, அரசனே உம்மையே நோக்கி மன்ருடுகிறேன், என் மன்ருட்டைக் கேட்டருளும். இரட்சகரே, எமது சீவியத்தின் சூரியனே! பசாசின் மாய்கைகளைத் தூரத்தி அடிப்பவரே! உம்மிலேயே நாம் சீவிக்கிருேம், அசைகிருேம். எமது இருளில் வெளிச்சமே! என்றும் எமது சீவியத்தின் வெளிச்சமாய் இரும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்ந்தெடுத்து வாசி

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

எவை? யாதெனில், முதலில் விசுவாசம். பின்பு, தூய சீவியம். இன்னும், போதிய கல்வி அறிவு. பித்தன் ஒருபாணம் விட்டால், நம்மவர் ஒன்பதுபாணம் தொடுக்கக்கூடிய ஆற்றலும் அறிவும் வேண்டும். அதை அடையத் தேவையானவைகளை ஆர்வத்துடன் வாசிக்கவேண்டும்; கற்றுக்கொள்ளவேண்டும். நமது விசுவாசத்திற்கு எந்தத் தருணத்திலும், நாம் தக்க சாட்சி சொல்லப் பக்குவமானவர்களாய் இருத்தல் வேண்டும்.

பரகதிசொரிந்த முத்துக்களென நாம் போற்றும் எத்தனை எத்தனை ஆயிரம் நூல்கள், தமிழிலும், ஆங்கிலத்திலும் உண்டு. அந்நூல்களினதும், அவைகளை எழுதித்தந்தவர்களினதும் நாமங்களையே குறிப்பிடில், அதற்கே ஒரு பாரியபுத்தகம் வேண்டும். வேதபுத்தகங்களை மாத்திரம் யான் குறிக்கவில்லை. பலதுறைகளையும் சார்ந்த நூல்களையும் நான் கருதுகின்றேன்— காவியங்கள், இதிகாசங்கள், நாடகங்கள், கட்டுக்கதைகள்.......

அப்படி இருக்கையில், அந்தப் பரலோக திரவியங்களைத் தள்ளிவிட்டு, பன்றிகள் நரகலை உண்ணத் தேடுவதுபோல், நம்மத்தியிலுள்ள எத்தனையோ வாலரும், யுவதிகளும் வேதவிசுவாசத்தையும் தூய கற்புநெறியையும் தகர்க்கும் ஊசலான விஷத்தையே நாடுவது, ஐயோ! பரிதாபம்! மதியீனம்!

இவ்விடத்தில் ஒன்றை யான் சுட்டிப்பாகக் குறித்தல் வேண்டும். நீவிர் வாசிக்கும் நூல்களின் தொகையையிட்டு, நமக்கு அக்கறை இல்லை. எவ்விதம் அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றீர் என்பதுதான் நமது தாழ்மையான வினா.

சிலர் ஆயிரம் நூல்களை வாசித்த பின்னும், முற்றித்தெறுக்கணித்த மூடர்களாய் இருக்கின்றார்கள். சிலர் இரண்டு மூன்று அரிய நூல்களை மாத்திரம் படித்து, ஞானத்தை அடைகின்றார்கள். சகோதரமே! நீ பரிசுத்த சுவிசேஷத்தையும், கிறிஸ்துநாதர் அநுசாரத்தையும், சில சிட்டர்களின் சரிதைகளையும், கரிசனையுடன் வாசித்துச் சிந்தித்து, ஒழுகுவாயானால் சாங்கோபாங்கத்தின் பாதையில் நீ நடந்து செல்வது நிச்சயம். அவைகள் மாத்திரம், ஒரு பாரிய புத்தகசாலையெனக் கூறில், அது மிகையாகாது.

நமக்குள்ள எல்லாத் திரவியங்களிலும் அதிமேலான திரவியம், நமது வேத விசுவாசம். சென்ற நூற்றாண்டில் பிரான்சிய தேசத்திலே லூயிபாஸ்தேர் என்ற பேர்போன மகான் ஒருவர் இருந்தார். உலகமே போற்றிய பேரறிஞர் அவர். எத்திறத்தினரும் அவரை ஏற்றிப் போற்றி வந்தித்தனர். ஒருமுறை ஒருகலைஞர் அவரை விழித்து, "ஐயா! யாவற்றிலும் மேலாக, நீர் அடைய ஆசிக்கும் கொடை யாது" என வினவினர். பாஸ்தேர் பகர்ந்த விடை: "நண்ப! பிரான்சிய பிறெற்ரெனிப் பட்டிக்காட்டுப்பெண் ஒருத்தியின் இதயத்திலுள்ள, திடங்கொண்ட வேத விசுவாசத்தையே எல்லாவற்றிலும் மேலாக யான் தேடி அடைய ஆவலுடையேன்" என்றார். இந்த விடையை வியாக்கியானம் பண்ண இக்கட்டுரை இடந்தராது. வாசக நேயரே! நீரே சற்றுச் சிந்தியும்.

ஆகவே, 1-வது: நமது விசுவாசத்தையும், தூய சீவியத்தையும் பாதிக்கும் எதையும், நாம் குப்பையில் வீசவேண்டும். 2-வது: அவைகளை வளர்க்கும் நூல்களை நாம் தேடிப் படிக்கவேண்டும். 3-வது: நாஸ்திகரினதும், தூர்த்தரினதும், பிரசுரங்களை, பித்தலாட்டங்களை, விழிப்புடனும், ஆர்வம் ஆராய்வுடனும், கண்டித்துத் துண்டிக்க வேண்டும். 4-வது: கத்தோலிக்க பிரசுரங்களை ஆதரிக்க வேண்டும்.

கடந்து சென்ற கிட்டிய ஆண்டுகளிலே, அவ்விதமாக முன்னின்று சமராடிய காலஞ்சென்ற மகாமேன்மை தங்கிய யாழ்ப்பாண மேற்றிராணியார் புரூ ஆண்டவர் அவர்களையும், அவருக்குப் பக்கத்துணையாய் இருந்து அருந்தொண்டாற்றிய இரு குருமுனிவர்களையும் இந்தவேளையில் நாம் நினைவுகூர்தல்தகும்; நன்றியினது கடனும்கூட. அக்குரவர்களில் முதலானவர் வண. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாச அடிகள். இரண்டாவதாக, அவரைப் பின்பற்றி ஒழுகிய வண. சூ. ஆசீர்வாதம் சுவாமிகள். யாம் அவர்களை மறக்கவே இயலாது. அவர்களினது அடிச்சுவடுகளை நாமும் சிறிதேனும் பின்பற்றுவோமாக.

இன்பகவி, பேரறிஞர் அமுது அவர்களினது புலம்பலில் இருந்து பின்வரும் பாடல்களைத் தருகிறேன்:

**1. ஞானப்பிரகாச சுவாமிகள்:**

"நன்னெறி நூல்களை ஆக்குவ
தார்? இனி
நச்சுப்பதர்களை போக்குவதார்?
தொன்மொழி ஏடுகள் தூக்குவ
தார்? இனித்
துட்டர் செயல்களைத் தாக்குவ
தார்?"

**2. ஆசீர்வாதச் சுவாமிகள்:**

"பேனைஎடுத்துப் படைதொடுத்துப்
—பல
பித்தக்கிறுக்குகள் கிறியவர்,
பூனையைக்கண்ட கிளிகளைப்போல்
—எங்கு
போயினரோ, அதையாமறி
யோம்"

வணக்கம்!

## கோடி அற்புதருக்கு நன்றித்துதி

ஒருமாத காலத்துக்குமுன் 2,000/. ரூபா பெறுமதியான தங்க நகைகள் என் பெட்டியிலிருந்து களவாடப்பட்டன— கண்கண்ட சாட்சியில்லை. கைதந்து உதவி செய்வார் யாருமில்லை. காணாத பொருட்களைக் காட்டிக்கொடுக்கிறவர் நிமிஷத்திற்கு 4000 புதுமை செய்கிறவர், துக்கித்த மனதுகளைத் தேற்றுபவர் அர்ச். அந்தோனியார் என்பதை உறுதியாய் உணர்ந்து, அவரிடம் என் குறைகளைச் சொல்லிக்காட்டி எனக்கு உதவிசெய்யுமாறு நேர்ந்தேன். நேர்த்திசெய்த 5-ம் நாள் ஆச்சரியமானவிதமாய்க் கோடி அற்புதர் காணாத பொருட்களைக் காட்டிக் கொடுத்தார். களவு வெளியானது. இழந்த என் நகைகள் என் கைவசம் வந்தன.

அர்ச். அந்தோனியாரே நீர் செய்த உதவி பெரிது. என்றென்றும் உமக்கு நான் நன்றிசெலுத்துவேன். நேர்த்திப்படியே தர்ம அப்பத்திற்குக் காணிக்கை அனுப்புகிறேன்.

மக்கரியாஸ் லெம்பேட்
தலைமன்னார்.

## சிந்தனைக் கதிர்

**—10—**

"கடைசி இராப்போசனம்" என்ற தமது பிரசித்திபெற்ற ஓவியத்தை வரைந்த சித்திர விற்பன்னர் லெயோனார்டோ டாவிஞ்சி கிறிஸ்துவின் உருவத்தை வரைவதற்கு மாதிரிகையாக இளைஞன் ஒருவனைத் தெரிந்துகொண்டார். ஆணழகன் அவன். அவனது அகத்தின் தூய்மை வதனத்தில் ஜொலித்தது.

சில வருடங்கள் கழிந்தன. இராப்போசனத்தின் இறுதி அங்கத்தவனான யூதாசைச் சித்திரத்தில் அமைக்கும் தருணம் அண்மியது. பேராசையும், பயங்கரத்தன்மையும் படர்ந்த யூதாசின் தோற்றமளிக்கும் மனிதனொருவனை மாதிரியாகப் பெறுவதற்காக மறியற்கூடங்களையும், காடையர் வசிக்கும் பகுதிகளையும் சுற்றியலைந்தார் ஓவியர். ஈற்றில் சாத்தானின் புதல்வனை நிகர்த்த தோற்றமுடைய ஒருவனைக் கண்டுபிடித்தார்.

உங்களுக்கு என்னைத் தெரியாதா எசமான்? சிலவருடங்கட்கு முன்னர் கிறிஸ்துவின் சித்திரத்தை வரைவதற்கு மாதிரியாக என்னை அமர்த்திக்கொண்டீர்களே என்றான் அந்த வாலிபன். அவனது கூற்று கலைஞரை ஆச்சரியத்திலாழ்த்தியது.

அருள் நிறைந்த நிலையில் கிறிஸ்துவின் தோற்றத்தில் காட்சியளிக்கும் ஆன்மா தீயசெயல்களால் எவ்விதம் மாற்றமடைகின்றதென்பது இச்சிறு சரிதையிலிருந்து பெறப்படுகின்றது. முகத்தோற்றம் மாறாதிருப்பினும் பாவம் எங்கள் ஆன்மாவின் அழகைக் கெடுத்துவிடுகிறது. அருள்நிறைந்த நிலையில் காணவேண்டிய நமதான்மா அவலட்சணமாகக் காட்சியளிப்பது எவ்வளவு தீமையானது?

— சா.பெ.

# திரிகோணமலை மேற்றிராணி....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உலகிற்கு ஒரு ஞானத்தீபமாயும், அடைக்கலக் கல்லாயும் விளங்கும். இப்படியாகக் கத்தோலிக்க திருச்சபையின் பரமதொண்டு துலாம்பரமாக, பிரிந்திருக்கும் மற்றும் கிறிஸ்துவ சகோதரர்கள், கிறிஸ்துநாதராலே ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபை இதுவே எனக்காண்பார்கள், கிறிஸ்துநாதராலே கருதப்பட்ட "ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" நாளையே இந்த 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம் எதிர்பார்க்கிறது.

சரித்திரத்தில் இப்படிப்பட்ட பெரும் நோக்கமுள்ள சங்கம் இதுவே எனலாம். இந்தவேளையில் இச்சங்கம் கூடுவது, ஒரு தவறானதைத் திருத்தவோ அல்லது திருச்சபையைப் பாதுகாக்கவோ அல்ல. திருச்சபை இந்நேரம் ஞானத்திலும் நன்னெறியிலும் துலங்குகிறது. இந்த வேளையில் திருச்சபை உயர்நிலை அடையத் துணிகிறது. "மறைக்கக் கூடாத விதமாய் நீதியின் சூரியனால் பிரகாசிப்பிக்கப்பட்டு, சத்திய வெளிச்சத்தை அகில உலகிற்கும் பரப்பும் ஒரு மலையில் ஏற்றிய தீபம் போல் திருச்சபை விளங்கவே!" (1-ம் வத்திக்கான் சங்கத்தின் வேத சாஸ்திர ஆயத்த நூல், 4-ம் அதிகாரம்) இச்சங்கம் உதவும்.

### முடிவுரை

யேசுக்கிறிஸ்துநாதரில் எமது அன்பார்ந்த சகோதரர்களே, பிள்ளைகளே, தற்பொழுது இந்த 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் சித்திக்கு நம்மெல்லோரிடமுமிருந்து எவ்வளவு கேட்கப்படுகிறதெனத் தெளிவாகிறது. இந்தச் சங்கம் சித்திபெற்றால், சர்வேசுரனுக்கு எவ்வளவு மகிமையும், திருச்சபைக்கும் அகில உலகிற்கும் எவ்வளவு ஆசீர்வாதங்களும் கிடைக்கும். ஆகையால் தான், நம் பரிசுத்த தந்தை 23-ம் அருளப்பர் இந்தச் சங்கத்திற்காகப் பெரும் ஆவல் காட்டுகிறார். இதன் கருத்துக்காகவே அகில உலகத்திலும் செபதபக் கிருத்தியங்களைக் கேட்டு நிற்கிறார்.

திருச்சபையின் உத்தம பிள்ளைகளுக்குரிய விதமாய் நாமும் பரிசுத்த பாப்பரசரின் குரலொலிக்குச் செவிசாய்ப்போமாக. அகில உலகிலுமுள்ள கோடாகோடிக் கத்தோலிக்க மக்களுடன் நாமும் சேர்ந்து செபிப்போமாக. கிறிஸ்துவின் ஞானச்சரீரமாகிய கத்தோலிக்க திருச்சபையானது, இந்தச் சங்கத்தின் சித்திகரத்தினால் சகல மக்களுக்கும், ஓர் அதி உன்நத இரட்சணியப் பேழையாகவும், அதனால், பிரிந்திருக்கும் கிறிஸ்துவர்களும் வந்துசேரவும், அகில உலகமும் அதையே தங்களது தஞ்சமும், தீபமும், அன்பின் அன்னையுமென அரவணைக்கக் கூடியதாயிருக்கவும், சர்வ வல்லப சர்வேசுரனை இரந்து பிரார்த்திப்போமாக.

அதே பிரகாரம், எமது குருக்களையும் அவர்களது அனுதின பூசைப்பலிகளில் இந்தக் கருத்துக்காக வேண்டிக் கொள்ளும்படி தூண்டுகிறோம், இயலுமான வேளைகளில் பூசைப்பலியை இதே கருத்துக்காக ஒப்புக்கொடுக்கட்டும். அப்படியே துறவறத்தவரையும், இல்லறத்தவரையும் கேட்டுக்கொள்ளுகிறோம். சத்திய இஸ்பிரீத்துசாந்துவானவரிடமும், ஞானத்துக்கு இருப்பிடமாகிய மரியன்னையிடமும் இந்தச் சங்கத்தின் அலுவல்களை ஒப்படையுங்கள். பரிசுத்த பாப்பரசர் சிறப்பாகச் சிறுவர்களையும், நோயாளர்களையும் பொதுச் சங்கத்தின் சித்திக்காகச் செபித்துத் தவம்செய்யும்படியாகக் கேட்கிறார்: "இச்சிறு பிள்ளைகளுடைய கூப்பிடுதல் சர்வேசுரனுடைய சந்நிதானத்தில் உகப்பாயிருக்கிறது." 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் சித்திக்காகச் சிறுவர்களைச் செபிக்கத் தூண்டுவதை அவர்களைப் பராமரிக்கும் குருமார், துறவிகளுடைய உதார குணத்துக்கே விட்டுவிடுகிறோம்.

இந்த நிருபம் எட்டிய நாள் தொடங்கி 2-ம் வத்திக்கான் பொதுச் சங்கம் முடியும் வரையும், அதற்காகப் பாப்பரசர் இயற்றிய செபத்தை தினசரிப் பூசைமுடிவில் சொல்லிவரவேண்டும். சகல விசுவாசிகளும் குருவானவருடன் சேர்ந்து சொல்லுவதற்காக அவர்களுக்கு இந்தச் செபம் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

## நன்றித்துதி

யேசு மரி சூசையப்பரின் இரக்கத்தாலும், அர்ச். யூதாததேயு, அர்ச். பிரான்சிஸ்கு அல்போன்சா, நீத்தம்மாள் இவர்களுடைய மன்றாட்டாலும் எனது வேதனை வருத்தங்கள் ஓரளவு சுகங்கிடைத்ததாலும் இன்னும் பூரணசுகம் கிடைக்க அருள்புரிவார்கள் என்ற நம்பிக்கையுடன் எனது தாழ்மையான நன்றித்துதியைப் பிரசுரிக்கிறேன்.

ஊர்காவற்றுறை சூ. ம. தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க பிரசுரங்களும் நாமும்

உலகம் நாளுக்குநாள் நாஸ்திகத்தை நாடிச் செல்லுகின்றது. இந்த நாஸ்திகப்பேய் எப்படி நாஸ்திகக் கொள்கைகளைப் பரப்புகிறது தெரியுமா? அது தான் அதுகண்ட ஒரேவழி. அது என்ன? அதுதான் தீயபிரசுரங்கள், புத்தகங்கள், பத்திரிகைகள் தீய கொள்கைகளை ஏட்டிலே தீட்டி நாட்டிலே பரப்புகின்றனர் நாஸ்திகர். இத்தீய செயல்களை ஓர் அளவிலேனும் போக்கத் திருச்சபை வருடாவருடம் சில இடங்களில் கத்தோலிக்க பிரசுர மாதத்தையும், சில இடங்களில் கத்தோலிக்க பிரசுர வாரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

"வாசிப்பாரில்லாவிடில் நல்ல அச்சகம் இருந்தும் பயனென்ன?" என்று துக்கித்தார் எமது தந்தை 11-ம் பத்திநாதர். கத்தோலிக்க அச்சகங்களில் கத்தோலிக்க பத்திரிகைகளை, புத்தகங்களை அச்சிட்டு அடுக்கி வைத்தால் மட்டும் போதாது. அவற்றை நாம் வாங்கிவாசிக்கவேண்டும். அதுமட்டும் போதாது, அவற்றைப் பிறர்மத்தியிலும் பரப்பவும் வேண்டும்.

"எதிர்க்கவும் காக்கவும் சக்திவாய்ந்த ஓர் ஆயுதம் விசுவாசமும், நேர்மையும் நிறைந்த ஒரு கத்தோலிக்க அச்சகம்" (அர்ச். 10-ம் பத்திநாதர்.) "நீங்கள் உலகம் எங்கும் சென்று சுவிசேஷத்தைப் போதியுங்கள்" என்றார் யேசு. எனவே எமது கடமை கிறிஸ்துவின் போதனையாகிய விதையை அள்ளி இறைக்க வேண்டும். இதுவே கத்தோலிக்க பத்திரிகைகளின் அலுவலாகும்.

"மேற்றிராணியாருக்கடையாளமான என் தங்கச்சிலுவையை விற்றாகிலும் ஒரு கத்தோலிக்க பத்திரிகையைக் காப்பாற்றுவேன்" என்று அர்ச். 10-ம் பத்திநாதர் கூறினார் என்றால் கத்தோலிக்க பிரசுரங்களின் பெருமை தான் என்னே! இதிலிருந்து கத்தோலிக்க பிரசுரங்களின் அவசியம் எத்தன்மையானது என்று அறியலாம். ஒரு கத்தோலிக்க சமுதாய வளர்ச்சியின் அடையாளம் அங்குள்ள கத்தோலிக்க எழுத்தாளரினதும், பத்திரிகைகளினதும், அச்சகத்தினதும் திறமையேயாகும். இதற்குப் பிரான்ஸ் தேசமே ஓர் எடுத்துக்காட்டு. நூற்றிருபது ஆண்டுகளுக்குமுன் அநேக அவிசுவாசிகள் இருந்தனர். ஆனால் இன்று, அற்புதமாற்றம், இதற்குக் காரணம் கத்தோலிக்க பிரசுரங்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.

"கத்தோலிக்க பிரசுரங்கள் உண்மையின், அன்பின் ஆயுதங்கள்"— 23-ம் அருளப்பர் (4-5-59). அணுகுண்டைவிட அதிக சக்திவாய்ந்தவை என்றே சொல்ல வேண்டும். "ஒருவன் கத்தோலிக்கனாயிருந்துகொண்டு தன்னை ஒரு கத்தோலிக்கன் என்றும் அழைத்துக்கொண்டு கத்தோலிக்க ஸ்தாபனங்களில் உறுப்பினராகவும் சேர்ந்து கொண்டு கத்தோலிக்க பிரசுரங்கள் மட்டில் கவலையற்றவிதமாய் நடந்து கொள்வது சுத்த அபத்தம்" என்று மீண்டும் கூறியுள்ளார் அர்ச். 10-ம் பத்திநாதர்.

கத்தோலிக்க பிரசுரம் ஒருசிறந்த அப்போஸ்தலத்துவம். கத்தோலிக்க பத்திரிகைகளையும், புத்தகங்களையும் நாம் வாசிப்பதுடன் அவற்றைப் பிறர் மத்தியிலும் பரப்பவேண்டும். கத்தோலிக்க இலங்கியங்களை வாசிக்கும் ஆர்வத்தை மக்களிடம் உண்டாக்குவது ஒரு சிறந்த அப்போஸ்தலத்துவமாகும். இவ்வப்போஸ்தல சேவையில் பங்குகொள்வது ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாகும்.

இனி, தீயபிரசுரங்களைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். கெட்ட புத்தகங்கள், பத்திரிகைகள் எமது இரட்சகராகிய யேசுநாதர் எமது இருதயங்களைச் சுற்றிக்கட்டிய காவற்சுவர்களைத் தகர்க்கப் பிசாசு உபயோகிக்கும் பீரங்கிகளாக இருக்கின்றன. திருச்சபைக்கும், பாப்பானவருக்கும், குருக்களுக்கும், சமயத்துக்கும் விரோதமானவற்றை அடக்கியுள்ள பிரசுரங்களை வாசிப்பதில் எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும். சன்மார்க்கத்துக்கு விரோதமானதும், சிற்றின்பம் பொதியப்பட்டதுமான கதைகளையும், கட்டுரைகளையும் வாசிக்கக்கூடாது. தீயபிரசுரமானது நாம் ஒரேமிடறில் விழுங்கிவிடும் நஞ்சுக்குச் சமானமாய் இருக்கிறது. கெட்ட பத்திரிகையோ எமது ஆத்துமத்தில் சொட்டுச் சொட்டாய்விழும் நஞ்சுக்குச் சமானமாய் இருக்கிறது.

ஆகவே, நாம் நல்ல கிறிஸ்தவரின் குணம் உள்ளவர்களாய்வாழ, கருத்து நிறைந்த கத்தோலிக்க பிரசுரங்களைப் படிக்கவேண்டும். கத்தோலிக்க பத்திரிகைகளை ஆதரிக்க வேண்டும். பிரசுர அப்போஸ்தவத்துவத்தைப் பிறர்க்குணத்த வேண்டும். தீயபிரசுரங்களைத் தீயிலிட்டு அழிக்க வேண்டும். பாப்புமாரின் படிப்பினைகளைப் படித்துப் பணிபுரியவேண்டும். இக்கத்தோலிக்க பிரசுரவாரத்தில் மட்டுமன்றி அதன்பின்னும் அவற்றைப் படிக்கவேண்டும்; பிறரிடமும் பரப்பவேண்டும். இப்படிச் செய்வோமேயானால் நமது திருச்சபையை எதிர்க்கும் சக்திகளை மேற்கொண்டு, கிறிஸ்துவின் இராட்சியத்தை உலகமடங்கிலும் பரப்பி இன்பமடைவோம். கத்தோலிக்க பிரசுரங்கள் பெருகுக! அவற்றின் புகழ் உலகமடங்கிலும்பரவுக! கிறிஸ்துவின் ஆட்சி எங்கும் நிலவுக!!

**இ. பேர்னுட்**

## பிரபல கத்தோ. ஏடுகள்

(12-ம் பக்கத்தொடர்ச்சி)

ரிகையில் வெளியாகிறது. கடந்த சில வருடங்களாகப் புதிய அம்சங்கள் பலவற்றைப் புகுத்தியிருக்கிறார்கள். இருந்தும் குறை சொல்பவர்களின் தொகையோ குறையவில்லை.

அகஸ்ரின்: சொல்வது எளிது. செயலில் காட்டுவதுதான் அரிது. பாதுகாவலன் பத்திரிகையை வெளியிடுவதால் எங்கள் மேற்றிராசனத்துக்கு நஷ்டமேதவிர லாபம் கிடையாது. பத்திரிகை சிறப்பாக இயங்க வேண்டுமாயின் அதன் சந்தாதாரர்களின் தொகை அதிகரிக்கவேண்டும். மற்றையபத்திரிகைகளைப்போல இதையும் வீதிகளில் கொண்டுதிரிந்து விற்க முடியாது. கத்தோலிக்கர்களே ஆதரிக்கவேண்டும். பத்தாயிரம் பிரதிகளாவது அச்சிட்டால்தான் லாபகரமாகப் பத்திரிகையை நடாத்தலாம். சிறப்பான முறையில் படங்கள், வர்ணச்சித்திரங்கள் முதலிய நவீன அம்சங்களைப் புகுத்தலாம். ஒன்றுக்கு மேற்பட்ட திறமைசாலிகளைக்கொண்ட ஆசிரியர் குழுவை நியமிக்கலாம். யாவும் நம்கையிலேயே தங்கியுள்ளது.

அப்பா: இந்தியாவில் வெளியாகும் ஒரேஒரு வாரப்பத்திரிகை **சர்வவியாபி.** சஞ்சிகைகளில் **கத்தோலிக்க சேவை, ஞானதூதன்** ஆகிய பத்திரிகைகள் நம்நாட்டில் பிரபலம் பெற்றுள்ளன. கத்தோலிக்க சேவை மாதமிருமுறையும், ஞானதூதன் மாதமொருமுறையும் வெளியிடப்படுகிறது. மற்றும் **சத்திய போதினி, தென் ஒலி, திரு இருதயத்தூதன், சத்தியசுடர், முன்னேடி** முதலிய சஞ்சிகைகளும் வெளியாகின்றன.

பெரியண்ணை: நம் கத்தோலிக்கரிடையே ஆர்வம்நிரம்பிய எழுத்தாளர்கள் பலர் உண்டு. இவர்கள் கத்தோலிக்க சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றைத் தவறாது வாசிக்கவேண்டும். பின்னர் பிறமொழிகளில் மிக உயர்ந்த முறையில் வெளியாகும் கத்தோலிக்க சஞ்சிகைகட்கொப்ப நமது தமிழ்ப் பத்திரிகைகளையும் உருவாக்க முயற்சிகள் எடுத்தால் நாமும் சிறந்த பத்திரிகைகளை அனுபவிக்கமுடியும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3454**

மானிப்பாய்

செல்லப்பா வைரமுத்து — வழக்காளி.

எதிராக, மானிப்பாய்

நன்னி கணவதிபெண் அன்னம் தனித்தும் காலஞ்சென்ற நன்னி கணபதியின் ஆதனங்களின் தத்துவ உரிமைக்காரியாகவும்.

— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3454-ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1962-ம் ஆண்டு பங்குனிமாதம் 31-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 507-56ம் ரூபாய் 448-50 சதத்துக்கு 21-6-60 தொடக்கம் 6-10-60 வரை 8 வீதவட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 171-48சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாயிறை வீரதேவன் சீமாவும் மற்றும் பிரிவினைகளும். (பர - நில - இலா 3 குளி 0) பர - நில - இலாமூன்றும் குளி 0. செய்பயிர் வான் பயிர்களும். எல்லைகிழக்கு முதலிசரவணையினுதனம். வடக்கும் — மேற்கும் — கணபதிபிள்ளை சிவக்கொழுந்துவினுரிமையாளரின் ஆதனம். தெற்கு—ஒழுங்கை இதடங்கலும். தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் $\frac{3}{5}$ பங்கும் அக்கிணற்றுக்கு வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

**செ. விசாகரத்தினம்,**
கொமிஷனரும், விலமதிப்பாளரும்

நம். 133, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
8-3-62

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**வழ. இல. 3405**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

உரும்பிராய்

அழகமுத்து கந்தையா

கைம்பெண் நாகமுத்து — வழக்காளி.

எதிராக, கொக்குவில்

V. P. S. முத்துக்குமாரசர்மி

— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 3405-ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஆதனம் 1962-ம்ஆண்டு சித்திரைமாதம் 21-ம் திகதி (21-4-1962) சனிக்கிழமை பிற்பகல் 2மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 6097-50சதம். 3-5-1960-ம் ஆண்டு தொடக்கம் 17-2-1961-ம் ஆண்டு வரையும் ரூபா 4,500-க்குப் 12 வீதவட்டியும், அதன்பின் கூடிய முழுத்தொகைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 268ரூபா 11சதமும். அதாவது ஏற்பட்டசெலவு 176ரூபா 20சதம். நிரூபணசெலவு 51 ரூபா 80சதம். செலவு 40ரூபா 10சதம். கொடுக்கும்வரையும் இறுக்கவேண்டும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோயிற்பற்று கொக்குவில் இறை 'வலத்தினை' அல்லது (சட்டைகலட்டி என்றும் நொச்சிக்காடு என்றும் அழைப்பர்) என்னும் காணி நில. பர. $15\frac{3}{4}$. இதில் நில. பர. 6உம் இதைச் சட்டை கலட்டியும், நொச்சிக்காடு என்றும் சொல்லலாம். இதில் நில. பர. $5\frac{1}{2}$ அதாவது மூன்று காணித்துண்டின் மொத்தம் $27\frac{1}{4}$ நில. பர. ஆகும். இதில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்காலுக்கு வலதுபக்கத்தில் கிணறும், இளையதம்பி பரஞ்சோதி சிந்தாமணியின் காணியில் உண்டு. எல்லை: கிழக்கு—துரைரெட்டினத்தின் மனைவி புவனேஸ்வரியும், இராமலிங்கம் நடராசாவும், கந்தையா செல்லத்துரையும், ஆறுமுகதாசன் நடராசாவும் பங்காளர். சோமசுந்தரம் நடராசாவின் மனைவி சரஸ்வதியின் ஆதனமும் உண்டு. வடக்கு—முன்னே கூறிய பங்காளர் சோமசுந்தரம் நடராசாவின் மனைவி சரஸ்வதியும், ஒழுங்கையும் உண்டு. மேற்கு — இளையதம்பி பரஞ்சோதியின் மனைவி சிந்தாமணியும், பங்காளர் சண்முகரெட்டினத்தின் மனைவி மகேஸ்வரியும், சின்னராசாவின் மனைவி மனோன்மணியும், துரையப்பாவின் மனைவி கனகமுத்துவும், மயில்வாகனத்தின் மனைவி குணசவுந்தரமும், சொக்கலிங்கத்தின் மனைவி நாகேஸ்வரியும் பங்காளர் சுப்பிரமணியத்தின் மனைவி சரஸ்வதியின் ஆதனமும் உண்டு. தெற்கு—கந்தையாவின் மனைவி சந்திரவதனமும், சுப்பையா கந்தையாவும், செல்வராசாவின் மனைவி அருந்ததியும், தருமலிங்கத்தின் மனைவி நவமணியின் ஆதனமும் உண்டு. இதன் மேற்கு எல்லையில் பரஞ்சோதியின் மனைவி சிந்தாமணியும், பின்னால் நடராசா ஆறுமுகம், நடராசா சோமசுந்தரத்தின் மனைவி சரஸ்வதியும் பங்காளரும். இதில் பிரிக்கப்படாத நில. பர. 10உம் $7\frac{91}{28}$ குளியும் உண்டு. (10 Lms. V.C. & $\frac{91}{128}$ Kls.) பதிவு இலக்கம் D 252/96.

**இ. கனகரத்தினம்**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறைறேட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவுபிடிக்கும் காரைநகர் வடக்கு வீ. வேலுப்பிள்ளை அவர்களிடம் அடைவுவைக்கப்பட்டுத் தவணைதப்பி மீட்கப்படாதிருக்கும் பின்னாற்காணும் நகைகள் என்னால் அக்கடையில்இருந்து 1962-ம்ஆண்டு பங்குனிமீ 30-ந்உ வெள்ளிக்கிழமை முற்பகல் 9மணிதொடக்கம் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

| திகதி | இலக்கம் | பெயர் | விலாசம் | கடன்தொகை | நகைவிபரம் |
|---|---|---|---|---|---|
| 15-11-59 | 614 | திருமேனி இராசரெத்தினம் | தோப்புக்காடு | 35-00 | ஒருதாலி |
| 8-12-59 | 702 | முருகேசு சண்முகநாதன் | பாலாவோடை | 40-00 | ஒருதாலி |
| 11-1-60 | 814 | ஐயம்பிள்ளை கந்தையா | அனலைதீவு கிழக்கு | 50-00 | ஒருபவுண் குண்டுடன் |
| 30-4-60 | 1125 | காசிநாதர் கந்தசாமி | பொன்னாலை தெற்கு | 35-00 | ஒருதாலி |
| 7-5-60 | 1145 | காசிநாதர் கந்தசாமி | பொன்னாலை தெற்கு | 25-00 | ஒரு கற்பென்டன் |

**வை. ஏரம்பமூர்த்தி,**
வெற்றீஸ் மேஸ்தர்.

காரைநகர்,
1962-ம்ஆண்டு பங்குனிமீ 1-ந்உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனிதா! நீ மண்ணுயிருக்கிருய்...."

## தபசுகாலச் சிந்தனைகள்

விபூதிப் புதன்கிழமை கத்தோலிக்க வருடத்தில் ஒரு புதுப்பருவம் துவங்கிற்று. வருடாவருடம் விபூதித்திருநாளன்று திருச்சபையானது தனது மக்களின் நெற்றியில் ஆசீர்வதிக்கப்பட்ட சாம்பரைப்பூசி **"மனிதா!** இதை ஞாபகத்தில் வைத்துக்கொள். ஏனெனில் **நீ மண்ணுயிருக்கிருய்** நீ மீண்டும் மண்ணுய்ப் போவாய்" என்ற வார்த்தைகளைக் கூறுகிறது.

இவ்வார்த்தைகளைச் சற்று ஆராயுங்கால் பல உண்மைகள் புலப்படுகின்றன. முதலில் மனிதனின் உற்பத்தி எடுத்து விளக்கப்படுகிறது. ஆதியில் சருவேசுரன் மண்ணிலிருந்து மனிதனை உண்டாக்கிய வேதாகம உண்மை புலப்படுகிறது. "நான்", "எனது" என்று வீம்புகூறித்திரியும் வீணரைப்பார்த்து "நீ தூசியும், சாம்பரும்" என்று திருச்சபை கூறும்பொழுது மனிதனுடைய எளியநிலை தெற்றெனத் தெரியவருகிறது. இது உண்மையென நாம் ஒப்புக்கொண்டால் மனிதனின் பெருமை என்னத்தில் தங்கியிருக்கிறது? நிச்சயமாகவே தம்முடைய சாயலில் அவனுக்குச் சருவேசுரனுல் அளிக்கப்பட்ட ஆத்துமத்திலேயே தங்கியிருக்கிறது. அழிவுள்ள உடம்பும் அழியாத ஆத்துமமும்சேர்ந்தஉயிரிலேயே மனிதன் என்ற உண்மை புலப்படுகிறது.

வேதாகமத்தில் கூறப்பட்டபடி "இவ்வுலகம் முழுவதையும் நீ ஆதாயமாக்கிக்கொண்டாலும் உனது ஆத்துமத்தை நீ இழந்தாயாயின் உனக்கு அதால் என்ன பயன் உண்டு?" என்ற கேள்வியை இத்தபசுகால நாட்களில் நாம் இடையிடையே நம்மையே கேட்கவேண்டியவர்களாயிருக்கிறோம்.

சைவமதத்தைச்சேர்ந்த புலவர்களும் "எல்லாப்படியாலும் எண்ணினுல் இவ்வுடம்பு பொல்லாப் புழுமலி நோய் புன்குரம்பை" அதாவது எவ்வாறுதான் நாம் யோசித்துப் பார்த்தாலும் இவ்வுடம்பானது கொடிய புழுக்களும் நோய்களும் நிறைந்த ஒரு கூடென்று எடுத்துக்கூறுகின்றனர்.

இவ்வுலகசெல்வங்களின் நிலையாமையைப் பட்டினத்துப்பிள்ளையாரும் "காதற்ற ஊசியும் வாராது நம் கடைவழிக்கே" என்று விளக்கியிருக்கிறார்.

இந்தப் புனிதகாலமாகிய தபசுகாலத்தில்—நாற்பதுநாட்களில்—நமது மாதாவாகிய சத்தியதிருச்சபை ஒறுத்தல், உபவாசம், பரித்தியாகம், தபம், செபம், தானம், தருமம் முதலிய நற்கிருத்தியங்களைச் செய்யுமாறு தம்மக்களை ஏவுகிறது. எல்லாச்சமயங்களிலும் ஒருசந்தி வற்புறுத்தப்படுகிறது. எமது சரீரமானது எமது ஆத்துமாவின் ஏவலாளனுக இருக்கவேண்டும் என்பதை வெளிப்படுத்துவதற்கு ஒருசந்தி பிடித்தல் நன்று.

உபவாசம், ஒறுத்தல் என்றசொற்கள் உணவைமாத்திரம் குறிப்பவை அல்ல. எங்கள் பஞ்சேந்திரியங்களை அடக்கி எமது ஆத்துமாக்களைப் பரிசுத்தமாக்குவதையே இம்முயற்சிகள் குறிக்கும். ஆபாசக்காட்சிகளிலிருந்து எங்கள் கண்களைப் பாதுகாத்தல், அவதூறுகேட்பதிலிருந்து எங்கள் செவிகளை அடக்கல், உதாசீன வார்த்தைகளிலிருந்து எங்கள் நாவை அடக்கல், அவலட்சணமான ஆடைகளை அணியாதிருத்தல், பலவித சரீர ஆசாபாசங்களை அடக்கல் போன்ற ஒறுத்தல்களுக்கு உபவாசம் ஒருபெரிய உதவியாயிருக்கிறது.

சரீரத்தின் இச்சைகளை அடக்குவதின் நோக்கம் ஆத்மீக ஈடேற்றத்தைப்பெறும் பொருட்டே. தவம் செய்வதன் நோக்கம் இரண்டெனலாம். ஒன்று நமதுபாவங்களுக்கு இவ்வுலகத்திலேயே உத்தரித்துச் சருவேசுரனுக்கு நிந்தைப்பரிகாரம் செய்தல். இரண்டாவது நமது வாழ்க்கையைப் புனிதப்படுத்துதல். மனிதன் எக்கதிக்காகச் சிருட்டிக்கப்பட்டானே, அக்கதியை அடைய விசேஷமாக இத்தபசுகாலம் அவனுக்கு மிகவும் பிரயோசனமாயிருக்கிறது.

குரான் என்ற இஸ்லாமிய நூலில் "நாங்கள் தேவனிடமிருந்து வந்திருக்கிறோம். நாங்கள் அவரிடமே திரும்பவும் போய்ச்சேருவோம்" என்று கூறப்பட்டிருப்பது மிகவும் கவனிக்கத்தக்கது. அர்ச். அகுஸ்தினுரும், "ஆண்டவரே உமக்காகவே நீர் என்னை உண்டாக்கியிருக்கிறீர். என் ஆத்துமமானது உம்மை வந்து அடையுமட்டும் ஆறுதலற்றிருக்கிறது" என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறார். இந்தஉலகத்தின் செல்வங்களையும் சரீர இன்பங்களையும் இவ்வாழ்க்கையின் கதியாய் எண்ணும் ஒருவன், தன் உண்மையான கதியை உணராது தவிக்கிறுன். இதை எடுத்துக்காட்டுவதற்குத் தபசுகாலத் தொடக்கத்தில் எங்கள் மாதாவாகிய திருச்சபை "மனிதா! நீ மண்ணுயிருக்கிருய்..." என்ற வார்த்தைகளால் எங்களை எச்சரிக்கை செய்கிறது. இவ்வுலக வாழ்க்கையைப் பலசமயங்களும் பலவாறு எடுத்து விளக்குகின்றன. இஸ்லாமியசமயம் "ஒருபிரயாணி வெய்யிலின் அகோரத்தால் ஒரு மரநிழலில் தங்கிச் செல்வதைப்போன்றதே மனிதனின் வாழ்க்கை" என்று விளக்குகிறது. சைவசமயமும் "இப்பூவுலக வாழ்க்கை ஒரு மாயம்" என்றுரைக்கிறது.

இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது. பரகதி, பரலோகம், மோட்சம் நிரந்தரமானது. இதுதான் மனிதனின் ஈறுந்தகதி. என்றாலும் நாம் **உலகம், சரீரம், பசாசு** என்ற மூவித சத்துருக்களால் அல்லும்பகலும் ஏமாற்றப்பட்டு எங்கள் பரகதியை மறந்து இவ்வுலக வாழ்க்கையே எங்கள் பரமானந்தம் என்ற லோகாயத கொள்கையை நடைமுறையில் ஏற்று வாழ்கின்றோம்.

**உலகமானது** எங்களை மண், பெண், பொன் என்ற மூவித சிற்றின்பங்களில் ஆழ்த்தி, எங்கள் ஞானக்கண்களை இருளடையப் பண்ணி, எமது ஆத்தும இரட்சணியத்தை நாம் அலட்சியம்செய்து வாழச்செய்கிறது. தேவகற்பனைகளுக்குப் பதிலாக உலக கற்பனைகளை நமக்குத்தந்து, தருமத்திற்குப் பதிலாக அதர்மத்தையே செய்ய நம்மை ஏவுகிறது.

எங்கள் **சரீரமோ** எங்கள் புலன்களுக்கு எங்களை அடிமைகளாக்கி, நாங்கள் தீமையைத்தேடி நன்மையை வெறுத்து, எங்கள் சகலவித ஆசாபாசங்களுக்கும் நாங்கள் அடிமைகளாகி, எங்கள் சரீரங்களைப்பாவக்குழிகளாக மாற்றக் கங்கணங்கட்டி நிற்கிறது.

**பசாசோ** கர்ச்சிக்கும் சிங்கம்போல எங்கும் அலைந்துதிரிந்து மனிதரைப் பாவச்சேற்றில் தள்ளிவிட அரும்பாடுபட்டு வருகிறது. நாங்களும் அதன் மாயவலையில் அகப்பட்டு, அதன் சோதனைகளுக்குச் செவிசாய்த்து, தலைவணங்கி, கைகூப்பி, தேவனையும், திருச்சபையையும் மறந்து பாவங்களை ஒன்றன்பின் ஒன்ருகச்செய்து அல்லற் படுகிறோம்.

கத்தோலிக்கரைப் பொறுத்தமட்டில் "அச்சயலில், அச்சமில்லை" என்றே நாம் கூறவேண்டும். அவர்களை யேசுக்கிறிஸ்துநாதர் அனுதைகளாக விட்டுப்போகவில்லை. மன்னுயிரை மீட்கத் தன்னுயிரைக் கொடுத்த சருவேசுரன், கல்வாரிமலையில் மூன்று ஆணிகளால் திருச்சிலுவையில் அறையுண்டபோது, உலகம், சரீரம், பிசாசு என்ற மூன்றுசத்துருக்களும் அறையப்பட்டன. ஆவைகளை ஜெயித்தார். அவருடைய திருப்பாடுகளின் பேறுபலன்களாலும், அவர் ஏற்படுத்திய தேவதிரவிய அனுமானங்கள் மூலமும், நாம் பெறும் இஷ்டப்பிரசாதம் எங்களை வேதவிசுவாசத்தில் ஸ்திரப்படுத்தி, எங்கள் வாழ்க்கைப்போரைச் சித்தியாகநடத்த எங்களுக்கு அரும்பெரும் உதவியாயிருக்கிறது.

இத்தபசுகாலத்தில் திருச்சபையும் இதை எடுத்து வற்புறுத்துமாப்போல் **"மனிதா! நீ மண்ணுயிருக்கிருய்"** என்று நினைவூட்டுகிறது. மனிதராகிய நாம் எங்கள் முழுநம்பிக்கையையும் யேசுக்கிறிஸ்துநாதரிலும், அவர் ஏற்படுத்திய தேவதிரவிய அனுமானங்களிலும் வைக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறது. "நானில்லாமல் நீங்கள் ஒன்றும்செய்யமுடியாது" என்ற நமதாண்டவரின் பொன்மொழிகளை நம்மனத்திலிருத்தி என்றும் பரலோகவழியில் அவர் உதவியுடன் நடப்போமாக.

இக்காலத்தில் விசேஷமாக நாங்கள் கிரமமாகச் செபம்செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். தபஞ்செய்து பசாசையும் அதன் தந்திரங்களையும் ஜெயித்து, அதன்சோதனைகளை மேற்கொண்டு, எங்கள் பாவங்களுக்கு மன்னிப்பு அடையவேண்டியவர்களாயிருக்கிறோம். நாளாந்த பூசைக்குச் சமுகமளித்தல் உசிதம். சிலுவைப்பாதைசெய்தல் ஒரு சிறந்த பத்திமுயற்சியாகும். ஞானவாசிளை மூலம் தியானங்களைச் செய்து எங்கள் சிந்தனைகளைப் பரிசுத்தப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். பண்டைக்காலத்தில் யாழ்ப்பாணக் கத்தோலிக்க மக்கள் தபசுகாலத்தில் சங்கைக்குரிய யக்கோமே கொன்சால்வேஸ் (அல்லது சாங்கோபாங்க சுவாமிகள்) எழுதிய நமதாண்டவராகிய யேசுக்கிறிஸ்துநாதரின் **திருப்பாடுகளின் வரலாற்றை** (பசாமை) தங்கள் வீடுகளில் மிகவும் மனவருட்சிக்குரிய முறையில் தினமும் —விசேஷமாக இராக்காலங்களில்— வாசித்து வந்தனர். வேறுபலர் கிறிஸ்துநாதரின் பாடுகளைப்பற்றித் தூத்துக்குடி அந்தோனிக்குட்டி அண்ணுவியார் இயற்றிய **"பேரின்பக்காதல்"**, பாஷையூர் சுவாம்பிள்ளைப் புலவரால் இயற்றப்பட்ட **"சிந்தாகுலத்திரட்டு"**, திருநெல்வேலி கித்தேரிமுத்து கனகப்பராயர் இயற்றிய **"நடுத்தீர்வைஉலா"**, மற்றோர் இயற்றிய **ஒப்பாரி, புலம்பல்** முதலிய பத்திப்பரவசமூட்டும் இனிய துக்ககீதங்களை, சிந்தைக்கும் செவிக்கும் உகந்த பத்திப்பாடல்களைப் படித்துப்பயனடைந்தனர். இக்காலத்தவரும் அவ்வாறு செய்வது மிகவும் விரும்பத்தக்கது. கத்தோலிக்ககுடும்பங்களில் நாளாந்த குடும்பச்செபமாலையின்பின் "கெட்டுப்போனேம் பாவியானேம்..." "மைந்தனுர் சிலுவைமீது..." "தூண்டு நேசத்தாலே வெந்து..." "மண்ணுல் மனிதனை உண்டாக்கி..." போன்ற துக்கீதங்களை இத்தபசுகாலத்தில் பாடுதலும் மிகவும் விருமபத்தக்கதே.

இவ்வருடம் நமக்குத்தேவன் அளித்த தபசுகாலத்தில் எங்கள் விசாரணைப்பங்கில் நடைபெறும் ஞானஒடுக்கத்தில் பத்தியுடன் பங்குபற்றி, எங்கள் ஆத்துமங்களுக்கு வேண்டிய பலவித வரப்பிரசாதங்களைப் பெறுவோமாக! பரலோக இராட்சியத்தை நாம் அடைய வழி தேடுவோமாக.

பி. ச.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். யூதாததேயுவின் சகாயத்தால் நான் கேட்ட மன்முட்டு அனுகூலமானதற்கு இப்பத்திரிகை வெளியீட்டின்மூலம் எனது நேர்த்தியைச் செலுத்துகிறேன். அவரின் நாமம் என்றும் புகழப்படுவதாக.

யூதாததேயுவின் தாசன்

---

### நன்றியறிதல்

திருஇருதயநாசரின் இரக்கத்தினாலும் பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு இவர்களின் மன்முட்டினுலும் என்னைச்சூழ்ந்து துன்புறுத்திய மலைபோன்ற துன்பங்கள் யாவும் சூரியனைக்கண்ட பனிபோல் மறைந்ததற்கும், மேலும் என்தொழிலுக்கு வந்துள்ள பெரிய இன்னல்கள் யாவும் விலகி எனக்கு வெற்றி கிடைத்ததற்கும் என்சிரம்பணிந்த நன்றி தெரிவிப்பதோடு இன்னும் எனக்கும் என்குடும்பத்திற்கும் சதாசகாயம் புரியும்படி உம்மைவேண்டி மன்றுடுகிறேன்.

எஸ். ஆர். பெர்னுண்டோ
கொழும்பு 13.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3369**

**யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில்**

காரைநகர் வடக்கு,
கந்தப்பர் ஞானப்பிரகாசம்—வழக்காளி,
எதிராக,
ஈச்சமொட்டை, யாழ்ப்பாணம்

1. இறந்தபோன அரியபுத்திரர் சிவகுரு.
2. ஷெ ஊர் பெண் இராசம்மா.
3. சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் விசுவலிங்கம் இராசலிங்கம்.
4. ஷெ ஊர் பெண் சத்தியதேவி

இரண்டாம் எதிராளி தனக்காகவும் தனது காலஞ்சென்ற கணவரின் ஆதனங்களின் பராமரிப்புக்காரியாகவும்.

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3369-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1962-ம் ஆண்டு சித்திரை மாதம் 11-ந் திகதி புதன்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3,540-ம் ரூபா 2,000-க்கு 17-5-1960 தொடக்கம் 26-6-61 வரை 12 வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 294-17 சதம். இதில் ரூபா 125 கொடுபட்டது.

**காணி விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சுண்டிக்குளியிலுற "ஐயக்காரன் சுடலை, அரியநாச்சிபுலம், வண்ணுன்புலம்" பா. நில. இல. நாலு—(பா. நில. இல. 4) வீடும், கிணறும், செய்பயிர்வான்பயிர்களும். எல்லை: கிழக்கு—ஆறுமுகம் சின்னையாவிற்குரிய வாதனம். வடக்கு—வி. தருமலிங்கத்திற்கும் மதுபேர்கட்குமுரிய வாதனம். மேற்கு—கே நாகலிங்கமும் பெண் பரூவதிக்குமுரிய வாதனம். தெற்கு—கையொழுங்கை இடைங்கலும். இதன் பதிவு D 156/120.

வை. சாம்பமூர்த்தி,
காரைநகர் கொம்பிஷனர்.

1962-ம் ஆண்டு பங்குனி மீ 3-ந் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் —

### வியாக்கியானக் குறிப்புகள்

### (1) அர்ச். ஸ்நாபக அருளப்பருடைய பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது — 1 : 5 - 25

**5. அரசனாகிய ஏரோதின் நாட்களிலே:** இந்த வசனம்

(அ) உலகசரித்திரத்தின் சரியான காலத்தைக் குறிக்கிறது.

(ஆ) யாக்கோப் செய்த தீர்க்கதரிசனம். (ஆதி. 49, 10) "அனுப்பப்பட இருக்கிறவர் வரும்பரியந்தஞ் செங்கோல் யூதாவை விட்டு (நீங்குவதுமில்லை)" என்றதை நிறைவேற்றுகின்றது.

**ஏரோதரசன்:** புதிய ஏற்பாட்டில் ஏரோதன் என்னும்பெயர்கொண்ட அரசர்கள் மூவர் காணப்படுகிறார்கள்.

(i) மாசில்லாத குழந்தைகளைக் கொன்றவன் முந்தினவன். இவன் யூதாகோத்திரத்தானல்லன், புறசாதியான். — பெரிய ஏரோது (கி. மு. 37—4).

(ii) இரண்டாம் ஏரோதன் ஸ்நாபக அருளப்பரைக் கொலைசெய்து, யேசுநாதரையும் பைத்தியக்காரன் என்று நிந்தித்தவன். இவன் முந்தின ஏரோதனுடைய மகனும் ஆர்க்கலாவுடைய தம்பியுமாயிருந்தான்.— ஏரோது அந்திபாஸ்,

(iii) மூன்றும் ஏரோதன் அர்ச். இராயப்பரைச் சிறையிலடைத்து, அர்ச். யாகப்பரைத் தலைவெட்டினவனும். இவன் முதலாம் ஏரோதனுடைய மூன்றும் மகனை அரிஸ்தோபுவினிடத்திற் பிறந்தவன். இவன் தேவகோபாக்கினையால் சரீராதியந்தம் ஒரு கணத்திலேயே புழுத்துச் செத்தான்—ஏரோது அக்கிரிப்பா.

இந்த வசனம் பெரிய ஏரோதைக் குறிக்கிறது. இவன் யூதேயா, சமாரியா, கலிலேயா, பெரேயா என்னும் மாகாணங்களை ஆண்டுகொண்டுவந்தான்.

**சக்கரியாஸ்:** இச்சொல் "சருவேசுரன் நினைவுகூர்ந்தார்" என்று அர்த்தங்கொள்ளும்.

**அபியாவின் கோத்திரத்தார்:** தாவீதரசன் யூதகுருப்பிரசாதிகளை 24 கோத்திரங்களாகப் பிரித்திருந்தார். இக்கோத்திரங்களுக்கு, தலைமையான குடும்பங்களுடைய பெயர்கள் கொடுக்கப்பட்டன. அபியா எட்டாம் கோத்திரத்துக்குத் தலைவர்.

**எலிசபேத்:** இச்சொல் "தேவனின் உறுதிமொழி" என்று அர்த்தங்கொள்ளும்.

**6. தேவசமுகத்தில் நீதிமான்களாயிருந்தார்கள்:** அதாவது தேவனுடைய ஊழியத்தில் தவறில்லாதவர்களாய்ச் சீவித்தார்கள்.

**7.** எலிசபேத் மலடியுமாய், இருவரும் வயதுசென்றவர்களுமாயிருந்தபடியால் அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது. ஆகையால், அர்ச். ஸ்நாபக அருளப்பர் அற்புதமான விதமாய்ப் பிறந்தார்.

**8 – 9. தமது வரிசைமுறையில்:** ஒவ்வொரு கோத்திரமும் ஒவ்வொரு வாரத்திற்குக் குருத்துவத் தொழிலை நடத்தும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சீட்டினுற் குறிக்கப்பட்டார் என்னும்போது, கோவிற்றிருப்பணியிற் பலவகைச் சடங்குகளிருந்ததினுல் இவருடைய கோத்திரத்தாரே தங்களுக்கிடையே சீட்டுப்போட, தூபங் கொடுக்கும்படி சக்கரியாசுக்குச் சீட்டு விழுந்ததென்று அறிக. ஒவ்வொரு கோத்திரத்திலும் அநேக குருப்பிரசாதிகள் இருந்தபடியால், இந்த மகிமையை ஒரு குருப்பிரசாதி தனது சீவியகாலத்தில் ஒரேயொரு முறை மாத்திரமே அடையக்கூடியதாயிருந்தது. சக்கரியாஸ் தனது விருத்தாப்பிய வயதுமட்டும் இதற்காகக் காத்திருக்கவேண்டியிருந்தது.

**10. தூபங் கொடுக்கும் வேளையில்:** (அதாவது விடியற்காலையிலும், பிற்பகல் 3 மணிக்கும்.) தூபத்திலிருந்து எழும்பின புகை, தேவனுடைய சிம்மாசனம் மட்டாக எழும்பின சனத்தின் செபத்துக்கு அடையாளம் — தாவீதின் சங்கீதம் 140, 2:– "என் விண்ணப்பம் தூபமாகவும், என்கைகளை உயர்த்துதல் அந்திப் பலியாகவும் உமதுசமுகத்தில் ஏறக்கடவது." யூதருடைய ஆராதனையில் தூபப்பலி முக்கியமான இடம் பெற்றிருந்தது.

**சனங்களெல்லாரும்:** அந்த நாள் ஓய்வுநாள் அல்லது பெருநாளென்று தோன்றுகிறது.

**11. ஆண்டவருடைய தூதன் தூபப்பீடத்தின் வலது புறத்தில் நிற்கிறவராய் அவருக்குத் தரிசனையானூர்:** மனிதவடிவமாகத் தோற்றிய தேவ தூதனைப்பற்றி அர்ச். லூக்காஸ் மற்றச் சுவிசேஷகரைப் பார்க்கிலும் விபரமாக எழுதியிருக்கிறூர். பழைய ஏற்பாட்டில் தேவ தூதன் இப்படி அனுப்பப்பட்டதைப்பற்றி மூன்று முறை எழுதப்பட்டிருக்கிறது. ஈசாக், சம்சோன், சாமுவேல் ஆகிய தீர்க்கதரிசிகளுடைய பிறப்பு தேவ தூதரால் வெளிப்படுத்தப்பட்டது.

**வலது புறத்தில்:** தேவ தூதன் பீடத்துக்கும், பொன்மெழுகுவர்த்தி தாங்கிக்கும் இடையில் தரிசனையானூர். வலதுபுறம் நல்லதோர் குறியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தது. (தேவதூதன் சக்கரியாசுக்குத் தரிசனமானது உரோமாபுரி ஸ்தாபிக்கப்பட்ட வருடத்திலிருந்து 748-ம் ஆண்டு ஐப்பசிமாதம் என்று கணக்கிடப்படுகின்றது.)

**12.** சக்கரியாஸ் தேவனுடைய மகத்துவத்தின் நிமித்தமும், தான் இந்தக் காட்சிக்குத் தகுதியற்றவர் என்றதின் நிமித்தமும் கலங்கினூர்.

**பயமும் அவரைப் பிடித்தது:** எபிரேயருடைய அபிப்பிராயத்தின்படி தேவதூதனைத் தரிசிப்பது மரணத்தின் அடையாளமாம் — (நியாயாதிபதிகள் ஆகமம் 6, 22).

**13. சக்கரியாசே! நீபயப்படாதே:** இந்த வார்த்தையைத் தேவதூதர் பல முறைகளில் உரைத்தார்கள். இவ்விதமாகச் சமாதானத்தின் நல்லுபதேசத்தைத் தகுந்த விதமாய் முன்னறிவித்தனர் — (மத். 28, 5). தேவதூதன் தனது பதில் மொழியால்,

(அ) சக்கரியாசைத் தேற்றினூர்

(ஆ) அவருக்கு ஒரு மகனை வாக்களித்தார்.

(இ) அம்மகனுடைய சீவியத்தைப் பற்றி விபரித்தார்

(ஈ) அவருக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தைப்பற்றி வெளிப்படுத்தினூர்.

**அருளப்பர்:** இச்சொல் "தேவனுடைய ஆதரவு" என்று பொருள்படும்.

**14.** இந்த வசனம் எபிரேய பாட்டியலின்படி எழுதப்பட்டது. ஒரு பொருளை எடுத்து அதை மீண்டும் ஆடம்பரமான விதத்திற் சொல்வது எபிரேய பாட்டியலின் படியான வழக்கம்.

**அநேகரும் அவருடைய பிறப்பினுல் மகிழ்வார்கள்:** திருச்சபை சாதாரணமாக அர்ச்சியசிட்டர்களுடைய மரணத்தைக் கொண்டாடுகிறது. ஆனுல், அர்ச். ஸ்நாபக அருளப்பருடைய பிறப்பையும் கொண்டாடுகிறது

**15. அவன் ஆண்டவருடைய சமுகத்தில் பெரியவனுயிருப்பான்:** (லூக். 7, 28 — "ஸ்திரீகளிடத்திற் பிறந்தவர்களுக்குள்ளே ஸ்நாபக அருளப்பரிலும் பார்க்கப் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை.")

**திராட்ச இரசத்தையும், மதுவையும் பானஞ்செய்யான்:** அர்ச். ஸ்நாபக அருளப்பர் "நசரைற்ஸ்" (Nazarites) என்ற மதப் பிரிவினரைச் சேர்ந்தவர். இவர்கள் தலைமயிர் வெட்டாமலும், மதுவைப் பானஞ்செய்யாமலும் தங்களைத் தேவனுக்கு அர்ப்பணஞ்செய்தார்கள்.

**16. அவன் எலியாசுடைய ஞானத்தையும், வல்லமையையும் உடையவனுய் (கர்த்தருக்கு) முன்னுக நடப்பான்:** எலியாஸ் தீர்க்கதரிசி உயிரோடு மோட்சத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்று பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. எலியாஸ் மெசியாவுடைய வருகைக்குமுன் திரும்பி வருவாரென்று யூதர்கள் காத்திருந்தார்கள். ஆனுல், அர்ச். ஸ்நாபக அருளப்பர் எலியாசுடைய ஞானத்தையும், வல்லமையையும் உடையவராய் மெசியாசை ஏற்றுக்கொள்ளும்படி இஸ்ராயேல் சனத்தை ஆயத்தப்படுத்தினூர்.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

## வழ. இல. M. B. 3091.

## யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

சிவியாதெரு, வே. இ. சுப்பிரமணியம் கைம்பெண் தங்கரெட்டினம்

— வழக்காளி.

எதிராக, மண்டைதீவு, இராமலிங்கம் நாகலிங்கம்

— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3091-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் ஆறுதுண்டுக் காணிகளை 1962-ம்ஆண்டு சித்திரைமாதம் 21-ந்திகதி சனிக்கிழமை (21-4-62) முற்பகல் 9மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,000. 15-10-1959 தொடக்கம் 6-7-1960 வரைக்கும் ரூபா 1,000-த்துக்குப் 12%வட்டியும், அதன்பின் கூடியமுழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும். இதில்ஏற்பட்டசெலவு 129ரூபா 50சதம். வெலியாத்துச்செலவு 38 ரூபா 50 சதம். வரும் செலவு 14 ரூபா 12 சதம். இதில் 90ரூபா கழிவு.

## ஆதன அடர்பு

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோயிற்பற்று, மண்டைதீவுஇறை "புல்லடித்தோட்டம்" என்னும்காணி நில. பர. 18. இதில் வீடும், கிணறும், வேறு தானுய் உண்டான பயிரும். எல்லை: கிழக்கு— நாராயணபிள்ளை வெற்றிவேலுவின் ஆதனம். வடக்கு — மண் ஒழுங்கை. மேற்கு — புஷ்பதிச்செட்டியாரின் மனைவி நாகலட்சுமிக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். தெற்கு — நாராயணபிள்ளை வெற்றிவேலுவின் ஆதனமும், சித்திவினுயக பிள்ளையார்கோயிலும் உண்டு.

2. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி, மேற்படிகூறிய கோயிற்பற்று மண்டைதீவுஇறை, "தொச்சித்தாழ்வு" என்னும்காணி நில. பர. 6. இதில் பிரிக்கப்படாத அரைவாசி. இதில் வீடும், கிணறும், வேறு தானுய் உண்டான பயிரும் உண்டு. எல்லை: கிழக்கு — வைத்திலிங்கம் செல்லத்துரையின் ஆதனம். வடக்கு — பொன்னம்பலத்தின் மனைவி காசிவதிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு — கனகசுந்தரத்தின் மனைவி கனகம்மாவின் ஆதனம். தெற்கு — கைஒழுங்கை.

3. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி மேற்கூறிய கோயிற்பற்று, மண்டைதீவுஇறை "மணிப்பத்து" என்னும்காணி நில. பர. 4. இதில் பிரிக்கப்படாத அரைவாசி. இதில் வீடும், கிணறும், வேறு தானுய்உண்டான பயிரும். எல்லை: கிழக்கும், வடக்கும் — கைஒழுங்கை. மேற்கு — சின்னப்பா வைத்திலிங்கத்தின் ஆதனம். தெற்கு — சித்தம்பலத்தின் மனைவி செல்லம்மாவின் ஆதனம்.

4. ஷெஇறை காணி நில. பர. 8. இதில் பிரிக்கப்படாத அரைவாசி. இதில் கிணறும், வேறு தானுய்உண்டான பயிரும். எல்லை: கிழக்கு — வைத்திலிங்கம் வேலுப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். வடக்கு — கணபதிப்பிள்ளையின் மனைவி விசாலாட்சியின் ஆதனம். மேற்கு — எதிராளிக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு — கதிரவேலு ஈராம்ப மூர்த்திக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம்.

5. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி மேற்கூறிய கோயிற்பற்று, மண்டைதீவுஇறை "கம்பம்புலம்" என்னும்காணி நில. பர. $22\frac{1}{4}$. இதில் பிரிக்கப்படாத $\frac{1}{3}$பங்கு. இதில் பனைமரங்கள் உண்டு. எல்லை: கிழக்கு — நாகமுத்து கல்லதயாவுக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். வடக்கு — குருநாதன் கைம்பெண் நாகமுத்துவின் ஆதனம். மேற்கு — அப்பாவு தில்லையம்பலத்துக்கும், தம்பியாருக்கும் உரியஆதனம். தெற்கு — சின்னத்தம்பி அப்புக்குட்டிக்கும், வேலுப்பிள்ளை இளையதம்பிக்கும் உரியஆதனம்.

6. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி மேற்கூறிய கோயிற்பற்று மண்டைதீவுஇறை "ஊரிக்காடு" என்னும்காணி நில. பர. 6-உம், கிணறும், வேறு தானுய்உண்டான பயிரும். எல்லை: கிழக்கு — செல்லப்பா சுப்பிரமணியத்தின் ஆதனம். வடக்கு — சின்னத்தம்பி வேலுப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். மேற்கு— சரவணமுத்துவின் மனைவி அன்னப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரிய்ஆதனம். தெற்கு — கணபதிப்பிள்ளையின் மனைவி விசாலாட்சியின் ஆதனம்.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

நம். 35, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தொண்டு இதழ்

# இப்போதுள்ள பழந்தமிழ் இலக்கியங்கள் தோன்றிய காலம்

(வண. சி. டேவிற் ஹியசிந் அடிகள், எம். ஏ., பிஎச். டி.)

(முன்தொடர்ச்சி)

பாடல்களின் அளவும், அவை எழுந்தகாலமும்பற்றி நினைக்கும்போது, நற்றிணையானது குறுந்தொகைக்கும் அகநானூற்றுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரியதாகின்றது. நற்றிணைப் பாடல் 23, அடி 5—6; பாடல் 150, அடி 4—5. ஆகியவற்றில், பாண்டிய மன்னர் குறுந்தொகையில் வருவதனினும் பார்க்க அடிக்கடி குறிப்பிடப் படுகின்றனர். இங்ஙனமே, சோழ மன்னரும் நற்றிணை 10 : 5—6, 87 : 3; 265 : 6-ல் குறிப்பிடப்படுகின்றனர். பிந்திய பாடலில் சோழமன்னன் "சிறுகோல் சென்னி" என அழைக்கப்படுகின்றான். இதிலிருந்து நற்றிணை 265-ல் வரும் சென்னி ஒரு சிறு தலைவனோ, அரசிளங்குமாரனோ, அங்ஙனம் ஆயிருக்கின்றானன்றிப் புறநானூற்றுச் சிற்சில பாடல்களிற் குறிப்பிடப்படுவதுபோல் மண்டலாதிபதி ஆகவில்லையென்பது தெளிவாகும்.

சிறு இலக்கத்தையுடைய புறநானூற்றுப் பாடல்களிலே கூறப்பட்டிருப்பது போலவே பாண்டியர், சோழர் அடிக்கடி அகநானூற்றுப் பாடல்களில் பெருநிலப் பரப்பினை ஆள்வோராகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அகம் 27 : 8-9 ; 36 : 14-20 ; 116 : 12-19 ; 162 : 21 ; 201 : 3-5 ; 253 : 4-5 ; 296 : 10-13 ; 338 : 5-ம் பாடல்களில் பாண்டிய மன்னன் தோற்றமுறுகின்றான்.

அகம் 44 : 14 ; 93 : 45 ; 96 : 13-14 ; 125 : 16-21 ; 137 : 5-6 ; 246 : 8-14 ; 336 : 19-23 ; 338 : 18-20 ; 356 : 11-15 ; 369 : 13-14 ; 375 : 10-15 ; 385 : 3-4-ம் பாடல்களில் சோழன் பிரஸ்தாபிக்கப் படுகின்றான். குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகிய மூன்று நூல்களும் தனித்தனி 400 அல்லது 401 பாடல்களுடையனஎன நினைக்கும்போது, இவ்வித்தியாசம் மிகத் தெளிவாகிறது.

அகநானூற்றுப் பாடல்கள் எல்லாம் பிந்திய காலத்தவை அல்ல; பாடலிபட்டின நந்தர் ஆகிய,

**"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்**
**சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை**
**நீர்முதற் கரந்த நிதியங்**
**கொல்லோ ?"**

என்ற அகம் 265 : 4-6 பாடலையியற்றிய புலவரை நந்தர் காலத்தையடுத்தவராகவே அப்பாடல் குறிப்பிடுகின்றது.

அகம் 251 : 5 நந்தருடைய புகழ் சிறந்த பெரும் செல்வம்பற்றிக் குறிப்பிடுகின்றது. "நந்தன் வெறுக்கை எய்தினும்" என்ற அடியை நோக்குக. "நந்தன்" என்றும், "நந்தர்" என்றும் பாட அல்லது பிரதி வேறுபாடு உளது.

நந்தனுடைய பெருஞ்செல்வக் குவையினும் பெரியதொன்றனை நினைக்க முடியாதென இப்பாட்டுக்குறிப்பிடுதலால், இவன் செல்வமிகுதி தானே தோற்றமளிக்கின்றது. அகம் 265 : 5, குறுந்தொகை 75 : 4 ஆகிய இரு பாடல்களிலுமிருந்து இப்பாடல்களைப் பாடிய புலவர் காலத்திருந்த பாடலிபட்டினம்—மிகவும் புகழ்படைத்தது ஒன்றாகக் குறிப்பிடப்படுகின்றது என்பது பெற்றும். புலவர் இங்கே குறிப்பிடுவது நந்த மன்னரதும் மௌரிய சக்கரவர்த்திகளினதும் தலைநகராகிய பாடலிபுரம்தானென்பதிற் சந்தேகமில்லை. ஏனெனில், குறுந்தொகை 75 : 3-4 அந்தநகரின் ஸ்தானம்பற்றித் தெளிவாகக் கூறுவது இங்ஙனமாகும்:

**"வெண் கோட்டியானை சோணைபடியும்**
**பொன் மலி பாடலி பெறீஇயர்"**

இவ்வடிகளால் இவ்வுண்மை புலப்படுகின்றது. கடைசி அடியில் அக்காலத்தைய பாடலிபுரத்தின் பெரும் பொற்குவியல்பற்றிய குறிப்பு வெளிப்படுகின்றது. இதனை இக்காலத்தைய சரித்திர ஆராய்ச்சியாளரும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

அகப்பாடல்களில் வரும் இக்குறிப்புகள் மிகப் பிரதானமானவை. ஏனெனில், அவை பாடாண்திணை ஆதியாம் புறப்பாடல்களிற்போல் பிரதான சங்கதியைப் பற்றிப்பேச எழுந்தனவாயிராதனவாய், ஏதோ விடயம்பற்றிப் பேசுகையில், தற்செயலாக இதனைப் பற்றிக் குறிப்பிட்டதால் என்க. ஆகவே, பழந்தமிழ்ச் சரிதமறிய விரும்பும் ஆராய்ச்சியாளருக்கு இக்குறிப்புக்கள், குறிக்கப்பட்ட கால எல்லை பற்றிய பாடல் ஆராய்ச்சியிலும், குறிக்கப்பட்ட சில சோழமன்னர் வம்சாவளிபற்றிச் சாதக பாதகமாக எழுதப்பட்ட பாடல் ஆராய்ச்சியிலும் எத்துணையோ மடங்கு மதிப்புடையன. ஏனெனில், புறப்பாடல்கள் அரசியற் சிறப்பைக் கூறுவதற்காக உண்மைக்குப் பிரதானத்துவம் கொடுக்காமல் இருத்தல் இயல்பே. புறப்பாடல்களில் மன்னரைப் போற்றிப் பரிசுபெறுதலே முக்கியம். உண்மையைக் கூறுவது அங்ஙனம் முக்கியம் அன்று.

அகம் 251, 265-ம் பாடல்கள் குறிப்பிடும் நந்தர்கள் யாவர்? கி. மு. 321-க்கு முன்னரேயிருந்த மகததேச மன்னர்களேயவர்கள். அவ்வாண்டில் சந்திர குப்தமௌரியன் கடைசி நந்த மன்னனை அரியணை துறக்கச் செய்து கொன்றுவிட்டான். வின்சென்ற் A. சிமித் "இந்திய ஆதி சரிதம்" என்ற நூலில் (1908), 38-ம்பக்கத்தில், அசோகமன்னன் (இவன் காலம் கி. மு. 273-231) காலத்திற்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே, அதாவது கி. மு. 370-ம்ஆண்டு தொடக்கம், நந்தர் ஆட்சி செய்ததாகக் குறிப்பிடுகிறார். அசோகனுடைய கல்வெட்டுக்கள் நாகரிகம்மிக்க ஐந்து தென்னிந்திய அரசுகளைப்பற்றிக் குறிப்பிடுவது ஆச்சரியமானதன்று. ஏனெனில், இதற்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே தமிழ்நாட்டில்வாழ்ந்த பெரும்புலவர்கள், பெருமக்களுள், வடஇந்தியாவில் உள்ள மகததேய அரசரைப்பற்றியும், அவர்தம் சூழ்நிலைபற்றியும், நன்குஅறிந்தவராய் இருந்திருந்தனர். அகம் 265-ம் பாடலையும், குறுந்தொகை 75-ம் பாடலையுமியற்றிய புலவர்களுக்கு மகததேச தலைநகரமாகிய பாடலியின் ஸ்தானம், அதன் பெரும் செல்வம் ஆதியன நன்கு தெரிந்த விஷயங்களே. V. A. சிமித் அவர்களுடைய கூற்றுப் பின்வருமாறு :

"கி. மு. 5-ம்நூற்றாண்டிலே இந்த இராச்சியம் கால்கொண்டது. இது சோண் (Son) நதியும், கங்கை நதியும் சங்கமித்தலால் ஏற்பட்ட நிலப்பாகத்தில் (Tongue of land), சோண் நதியின் வடஓரத்திலும் கங்கைக்குச் சிறிது தூரத்திலுமிருந்தது" (பக்கம் 119). குறுந்தொகை 75-ம், அகம் 265-ம் பாடல்களை ஏறக்குறையக் கி. மு. 324-ல் இயற்றிய தமிழ்ப்புலவரின் கூற்று. இங்ஙனமாக இருப்ப, அரண் செய்யும் வகையில் பாடலிபுரம்பற்றி, சிமித் அவர்களின் வருணனையும் சொல்லடுக்கும் போக்குமிருத்தலைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருசாரார் கூற்றும் பொருத்தமும் எம்மனைவருக்கும் வியப்பைத்தரும்

### கடாவும் விடையும்

நான் [illegible] மறுத்துப் பலர் என்னைப் பின்வருமாறு உசாவலாம். "ஒரு அரசனைப்பற்றியோ, தலைவனைப்பற்றியோ ஒரு புலவர் குறிப்பிடுவதனைக்கொண்டு, அவன் அவர் காலத்தவனெனக் கொள்ளுதல் ஏற்புடைத்தா? புலவர் பன்னெடும் ஆண்டுகட்குமுன் நிகழ்ந்த—தாம் பாடிய பாடல்களுக்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்குமுன் நடந்தேறிய ஒரு நிகழ்ச்சியைக் கருதலாகாதா?"

ஆம்; பொதுவாக, விடயத்தை அறியாது, பார்க்கும்போது அவர்கள் கேட்பது பொருத்தந்தான்; இது அங்ஙனம் நடந்திருக்கக் கூடியதொன்றே. ஆயின், பாடல்கள் குறிப்பிடும் சூழ்நிலைகளைப்பற்றி நினைக்கும்போது, இது நடவாததொன்றே. அதற்குரிய காரணம் பின்வருமாறு :

(அ) மருதம் என்ற பகுதியைப் பற்றிய அகப்பாடல்களிலே நான் மேலேகூறிய நிகழ்ச்சிகள் பெரும்பான்மையாய்க் குறிக்கப்படுகின்றன. இத்தகைய அகப்பாடல்களிலே மனைவி அல்லது கதாநாயகி தலைமகனது அல்லது தலைவனுடைய நன்றியில் பண்பை எடுத்துக் கூறுகின்றனள். தலைமகன் பரத்தையர் வசப்பட்டு, நாணமிழந்து, புதுப்புது இன்பத்துறைகளை நாடுகின்றான். அவன் நந்தவனங்களிலும், மாக்காக்களிலும், நீர்த்துறைகளிலும், நீராடுமிடங்களிலும், ஆற்றின் கரைகளிலும், கடற்கரைகளிலும் பரத்தையருடன் காலங்கழிக்கிறான். ஊர்முழுவதும் இவ்விஷயம் அடிபடுகிறது. அலர் ஆகின்றது. இவ்வுரை தலைமகளின் காதில் மிக உரமாய், ஒரு மன்னன் தன்பகைமன்னன்மீது உருத்தெழுந்து வென்றக்கால் அவன் வெற்றித்தானையிடத்தெழும் போராவாரம் போன்றதாய், விழுகின்றது. இந்த இடத்திலேதான் மேற்கூறிய குறிப்பு நிகழுவதாயுள்ளது. அகநானூற்றுப் பாடல்களில் இக்குறிப்புப் பாடலின் பின்னரைப் பாகத்திற் சொல்லப்பட்டுப் பாடலிறுதிவரை ஊடுருவி நிற்கிறது. அகநானூற்று 36-ம் பாடல், 23 அடிகளைக்கொண்ட மருதத்திணைப் பாடலாயமைந்துள்ளது. பாடலின் முதற் பன்னிரு அடிகளும் தலைமகனை நீட்டிவிளித்து மேற்கூறிய இழிமொழி வார்த்தைகளைப்பற்றி எடுத்தியம்பும் வகையில் அமைந்துள்ளன. அவ்வடிகளிற் சில வருமாறு :

**வருபுனல் வையைவார் மணல்**
**அகன் துறைத்......9**
**திரு மருது ஓங்கிய விரிமலர்**
**காவின்......10**
**நறும்பல் கூந்தல் குறுந்தொடி**
**மடந்தையொடு......11**
**வதுவை அயர்ந்தனை என்ப.**
**அலரே......12**
**கொய் சுவர் புரவிக் கொடித்**
**தேர்ச் செழியன்......13**
**ஆலங் கானத்து அகன்தலை**
**சிவப்ப......14**
**சேரல் செம்பியன் சினங்கெழு**
**திதியன்......15**
**எழுவர் நல்வலம் அடங்க**
**ஒருபகல்......20**
**முரசொடு வெண்குடை**
**அகப்படுத்து உரைசெலக்............21**
**கொன்று களம் வேட்ட ஞான்றை...22**
**வென்றி கொள்வீரர் ஆர்ப்பினும்**
**பெரிதே......23**

தலைமகனை இழித்துரைக்கும் "அலர்" என்ற வார்த்தை எழுமிடத்தைப் பாடலின் பருப்பத்துடனும் அதிற்காணும் குறிப்புடனும் ஒப்பிட்டு யாம் நோக்கும்போது என் கருத்து [illegible] என்பது புலப்படும். இதற்குக் குறுந்தொகை 97 : 4 ; 258 : 2 ; 262 : 1 ; 393 : 2 உம், அகநானூறு 36 : 12 ; 116 : 12 ; 201 : 10 ; 211 : 17 ; 216 : 6 ; 253 : 3 ; 296 : 14 ; 323 : 1 உம், ஐங்குறுநூறு 71 : 3 ; 75 : 2 ; 77 : 2 ; 164 : 4 ; 236 : 1 ; 279 : 5 உம் உதாரணங்களில் சிலவாகக் கொள்ளப்படலாம். ஐங்குறுநூற்றுக் குறுந்தொகைப் பாடல்கள் 8 அடிக்குக் குறைந்தவை; அகநானூற்றின் பாடல்கள் 12 அடிக்குக் கூடியவை.

புலவருடைய ஒப்புமைக் கண்ணுள்ள முக்கிய அம்சம் பாடலை வாசிப்பவர் அல்லது செவிசாய்த்துக் கேட்பவர்முன், இருசர்வ சாதாரண உண்மைகளைப் பொறித்தலேயாம். அவ்விரு உண்மைகள் யாவையெனில், மேலேகாட்டிய "அலர்" என்னும் பழிதூற்றும் மொழியும், அக்காலத்தில் அல்லது அதற்குச் சற்றேமுந்திய காலத்தில் நடந்த நிகழ்ச்சியுமாம். இந்த அலர் மொழிக்கு ஒப்பான நிகழ்ச்சி, பல நூற்றாண்டுகளுக்குமுன் நடந்ததொன்றாயின். புலவருடைய நோக்கமாகிய அம்சம் கூர் மழுங்கிப் பயனற்றதாய் அழிந்தொழியும் என்பது யாவர்க்கும் வெளிப்படை.

(ஆ) "பழந்தமிழரின் காலவரன்முறை" என்ற தமது நூலில் K. N. சிவராஜாப்பிள்ளை அவர்கள் மேலே காட்டிய பாடல்களை ஆக்கிய புலவர் காலத்துக்கும் அப்பாடல்களில் வரும் சரித்திரப் புருஷர்களின் காலத்துக்குமுள்ள ஒப்புமையைக் காட்டத்தெண்டித்தார். இங்ஙனம், இவர் தொடங்கும் ஆரம்ப நிலையிலேயே, நாம் மேலே குறித்த காலம்பற்றிய விஷயங்கள் தாமாகவே பெறப்படக்கூடியனவாகவுள்ளன. தமது கலாநிதிப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரையாகிய "பத்துப்பாட்டுஉரை" என்பதில், இலங்கைச் சர்வகலாசாலையைச்சேர்ந்த டாக்டர் வித்தியாநந்தன் அவர்கள் இக்கால ஒப்புமைபற்றி விஸ்தரித்துக் கூறிச் செல்லுகிறார். இவ்வழிபற்றிய ஆழ்ந்த ஒப்புமை ஆராய்ச்சிமூலமாக மேலே காட்டப்பட்ட குறிப்புகள் ஏககால நிகழ்ச்சிகளையோ, அல்லது புலவர் காலத்துக்குச் சிறிதுமுன்பதாக நிகழ்ந்தவனவற்றையோ, குறிப்பதை யறியலாம். நந்தரைப் பற்றியோ பாடலியைப் பற்றியோ புலவர் குறிப்பிடுவனவற்றை இந்தமுறையில் ஏற்பதே சரி. அதனைப் புறனடையாகக் கொள்ளவேண்டிய காரணம் யாதுமிலது.

(இ) இதற்குமாறாக இதுபற்றி நாம் ஆற்றுப்படுத்தற்குரிய விஷயங்களுமுள. சந்திர குப்தன், அசோகன் போன்ற மௌரிய மன்னர்கள் செல்வம், அதிகாரம், அரசியற்பரப்பு ஆதியவற்றில் மகததேச நந்தமன்னரினும் எத்தனையோ மடங்கு சிறந்து, நந்தர்களின் புகழை மறைக்கக்கூடிய தகுதி வாய்ந்தவராயிருந்தனர். ஆகவே, மேற்கூறிய பாடல்களையியற்றிய புலவர் இம்மௌரிய பெருமக்கள் காலத்தில் அல்லது அதன்பின்பு வாழ்ந்திருந்தால் செல்வம், அரசியற்சிறப்பு ஆதியனவற்றிற்கு உவமை கூறுங்கால், வலியற்ற நந்தர்களைக் குறிப்பிடாது மௌரிய மன்னர்களைப்பற்றியே குறிப்பிட்டிருப்பர். ஆகவே, இப்பாடல்கள் மௌரிய மன்னனாகிய சந்திரகுப்தன் அரசுக்கட்டில் ஏறிய காலமாகிய கி. மு. 321-க்கு முந்தியனவாகவே கொள்ளப்படுதல் வேண்டும் என்பதிற்றடையில்லை. இத்தகைய நிகழ்ச்சி தென் தமிழ்ப் புலவர் பெருமக்கள் காதில் எட்டவோ, ஏனையஇடங்கட்குப் பரவவோ காலஞ் சென்றிருக்கமாட்டாது. ஆகவே, இப்பாடல்களை நாம் கி. மு. 324-க்குரியனவாக அதாவது நந்தர் வீழ்ச்சிக்குச் சற்றுமுந்தியனவாகக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாசவேளை

நமது நிருபர் அமலன்

# பிரபல கத்தோலிக்க ஏடுகள்

● யுனிவர்ஸ் ● அமெரிக்கா ● ஆவேமரியா ● சைன் ● இமல்டிஸ்ற்

○ இருதயத் தூதன் ● மாறிஸ்ற் மிஷன் ● வார்த்தை ○ பாதுகாவலன்

அப்பா : இன்று 18-ந்தேதி ஞாயிறு வாரம் யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் கத்தோலிக்க பிரசுரவாரமாகக் கொண்டாடப்படும். எனவே எங்களது இன்றைய கலந்துரையாடல் கத்தோலிக்க பத்திரிகைகளைப்பற்றியமைவது நல்லதல்லவா?

அம்மா : சிறந்தமுறையில் வெளியாகும் கத்தோலிக்க பத்திரிகைகளைப் பற்றிச் சொல்லுங்கள்.

பெரியண்ணு : பாப்பரசரின் பத்திரிகையுடன் ஆரம்பிப்போம். வத்திக்கானில் வெளியாகும் **ரேமன் அவதானி** தினசரி திருச்சபையின் தலைவரது செய்திகளையும் அறிக்கைகளையும், திருச்சபைக்கெதிராகக் கூறப்படும் அபத்தங்கட்கான உண்மைவிளக்கங்களையும் தாங்கி வெளியாகின்றது. இத்தினத்தாளைப்பற்றி எங்கள் பாதுகாவலன் பத்திரிகை சிலமாதங்கட்கு முன்னர் விரிவான கட்டுரைகளை வெளியிட்டுள்ளது.

கார்மெலா : இதைத்தவிர வேறு இடங்களில் கத்தோலிக்க தினசரிப் பத்திரிகைகள் வெளியிடப் படுகின்றனவா?

அகஸ்ரின் : இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கால ஆதியாம் நாடுகளில் கத்தோலிக்க தினசரிகள் பல உண்டு. ஆயினும் ஆங்கிலத்தில் தினசரிப்பத்திரிகைகள் இன்னும் வெளிவரவில்லை யென்றே எண்ணுகிறேன்.

அன்ரன் : உலகிலேயே, சிறந்த பெரிய கத்தோலிக்க வாரப்பத்திரிகை எது?

பெரியண்ணு : லண்டனில் இருந்து வெளியாகும் **யுனிவர்ஸ்** பத்திரிகைதான். பன்னிரண்டுலட்சம் பிரதிகள் வெளியாகின்றன. வாரந்தப்பாது சிறந்த அமைப்புடன் தனக்கெனத் தனியான அம்சங்களுடன் உலகமெங்கணுமுள்ள கத்தோலிக்கரின் செய்திகள் பலவற்றைத்தாங்கி வெளியாகிறது. அடிக்கடி பலவர்ணப் படங்களுடன் பிரத்தியேக மலர்களும் பிரசுரிக்கின்றனர். அண்மையில் இச்சஞ்சிகை தனது நூற்றுண்டுவிழாவைக் கொண்டாடியது. உலகம் முழுவதிலும் வெளியாகும் கத்தோலிக்க பத்திரிகைகளெல்லாம் தங்கள் செய்திகட்காக யுனிவர்ஸ் பத்திரிகையையே முன்னோடியாகக் கொண்டுள்ளன என்றால் அதன் சிறப்பு எத்தகையது?

நிர்மலா : அமெரிக்காவிலிருந்து வெளியாகும் கத்தோலிக்க ஏடுகளுள் சிறந்த வார ஏடு எது?

அகஸ்ரின் : சிறந்த என்ற பெருமையைத் தாங்குவது **அமெரிக்கா** என்ற பிரசுரம்தான். 52 வருடங்கட்கு முன்னர் போறிஞரான குரவரொருவரை கத்தோலிக்க கலைக்களஞ்சியம் ஒன்றை உருவாக்கும்பணியில் அமர்த்தினர். களஞ்சியம் உருவாகும்போதே குரவருக்கு பத்திரிகை யொன்றை வெளியிடும் எண்ணம் தோன்றியது. அமெரிக்கா என்ற சஞ்சிகையை மேலதிகாரிகளின் அங்கீகாரத்துடன் ஆரம்பித்தார். உலக விவகாரங்களனைத்தையும் கத்தோலிக்க நோக்கில் கவனிப்பது இச்சஞ்சிகையின் கொள்கை. அருமையான காகிதத்தில் பிரபல கல்விமான்களின் எழுத்தோவியங்களைத் தாங்கிவரும் அமெரிக்கா மிக விலையுயர்ந்த பத்திரிகையாயினும் உலகவிவகாரங்களில் நடுநிலையுடன் விமர்சனம்செய்யும் பத்திரிகையென்பதால் பெருமளவில் விற்பனையாகிவருகின்றது.

அப்பா : கன்னியர்மடச் சிரேஷ்டரொருவர் தவறாது **அயர்லண்ட்ஸ் ஒன்** என்ற வாரஇதழை எனக்கு அனுப்பிவருகிறார். அயர்லாந்தில் பிரசுரமாகும் இவ்விதழ் புத்தகரூபமானது. மிக ஆழமாகப் பொறுமையுடன் வாசித்துக் கிரகிக்கவேண்டிய பத்திரிகை. இங்குள்ள 3 கன்னியர் மடத்தலைவிகள் அந்தப்பத்திரிகையை என்னிடம் பெறுவதில்காட்டும் ஆர்வத்திலிருந்தே அதன் தரத்தை நிர்ணயிக்கலாம்.

பெரியண்ணு : நியூசிலாந்திலிருந்து இரண்டு சிறந்த வாரஏடுகள் பிரசுரமாகின்றன. **நியூசிலாந்த ரபினற்** என்ற சஞ்சிகை புத்தகரூபமாக 40 பக்கங்களுடன் வெளியாகிறது. **சிலோந்தியா பாதுகாவலன்** பத்திரிகையளவில் 16 பக்கங்களுடன் பிரசுரிக்கப்படுகிறது. இருசஞ்சிகைகளும் கத்தோலிக்கசெய்திகளையும், எழுத்தோவியங்களையும் வெளியிடுவதிலும் வாசகர்களின் கவனத்தைக் கவரும் நவீன அம்சங்களைப் புகுத்துவதிலும் போட்டிபோட்டுக்கொண்டு உழைக்கின்றன.

அகஸ்ரின் : இங்கிலாந்தில் வெளியாகும் **டெயிலி மிரர்** என்ற தினசரிப் பத்திரிகையை வாரம் ஒருமலராகச் சேர்த்து கல்லமுறையில் அனுபந்தமாக இங்கு விற்பனைசெய்வது போல அமெரிக்காவில் பிரசித்தி பெற்ற நோட்டரிடாம் சர்வகலாசாலையிலிருந்து வெளியாகும் **ஆவேமரியா** என்ற வாரப்பத்திரிகையும் மாத அனுபந்தமாக வெளிநாடுகட்கனுப்பப் படுகின்றது. அதிகஅளவில் விற்பனையாகும் வாரப்பத்திரிகைகளில் இதுவுமொன்று.

அஞ்சலா : அமெரிக்காவிலிருந்து வேறு வாரப்பத்திரிகைகளும் வெளியாகின்றனவா?

பெரியண்ணு : தினசரிப்பத்திரிகைகளின் அளவில் இருபதுக்கதிகமான பக்கங்களுடன் வெளியாகும் பல பத்திரிகைகள் உண்டு. கேலிச்சித்திரங்கட்கு **டைடிங்ஸ்** பேர்போனது. திருச்சபையைஎதிர்ப்போரை ஆணித்தரமாகத் தாக்குவது **கதலிக் றிவியூ.** சிறந்த கட்டுரைகளைமட்டும் தாங்கி வருவது **எமது ஞாயிறு தரிசகன்.** உலகின் முக்கிய பிரச்சினைகள்பற்றி விமர்சனக்கட்டுரைகளைப் பெருமளவில் தருவது **கதலிக் வீக்.**

நிர்மலா : யுனிவர்ஸ் சஞ்சிகையைத் தவிர வேறு பத்திரிகைகள் இங்கிலாந்தில் பிரசுரமாகின்றனவா?

அகஸ்ரின் : **கதலிக் டைம்ஸ்** இங்கிலாந்திலேயே முதலில் ஆரம்பிக்கப்பட்ட கத்தோலிக்க வாரசஞ்சிகை. **கதலிக் கெறல்ட், கிளாஸ்கோஒப்சேர்வர்** இரண்டும் தினசரிப் பத்திரிகை அளவில் பலபக்கங்களுடன் பிரசுரிக்கப்படுகின்றன. அரசியல், பொருளாதாரம், வாழ்க்கைத்தராதரம் என்ற பிரச்சினைகளைக் கத்தோலிக்க நோக்குடன் அலசுவது **ரபினற்.** பெரியோரும் சிறியோரும் படிக்கத்தக்க சிறுகதைகள், சுவையான நிகழ்ச்சிகள் முதலியவற்றைப் பிரசுரிப்பது **கதலிக் பயர்சைட்.** அதிகமான புகைப்படங்களுடன் பிரசுரமாவதென்ற பெருமை **கதலிக் [illegible]** பத்திரிகையையே சாரும்.

கார்மெலா : அப்பா நீங்கள் குறிப்பிட்ட சஞ்சிகையைவிட அயர்லாந்தில் வேறு கத்தோலிக்க பத்திரிகைகளும் உண்டா?

அப்பா : அயர்லாந்து முழுவதும் ஒரு கத்தோலிக்க நாடுதானே. **ஸ்ரான்டேட், ஐரிஸ்கதலிக், ஐரிஸ் வீக்லி** முதலிய சிறந்த வாரசஞ்சிகைகள் கத்தோலிக்கசெய்திகளையே அதிகமாகத் தாங்கி வெளியாகின்றன.

அகஸ்ரின் : அடுத்து மாதசஞ்சிகைகளைப் பார்ப்போமா?

பெரியண்ணு : கிறிஸ்துவின் அடியார்களான குருக்களும், கன்னியர்களும் தாம் செல்லுமிடமெங்கும், தொண்டாற்றும் ஒவ்வொரு தேசங்களிலும் கத்தோலிக்க அச்சுப்பிரசுரங்களை வெளியிட்டுவருகின்றனர். ஆயின் அதிகவசதியுள்ளதென்ற காரணத்தால் பிரித்தானியாவும், அமெரிக்காவும் தான் இப்பணியில் முதன்மைதாங்குகின்றன. வாரசஞ்சிகைகளில் மிகச் சிறந்ததை வெளியிடும் பெருமை இங்கிலாந்தைச் சேர்வதுபோல உன்னதமான முறையில் கத்தோலிக்க மாத சஞ்சிகைகளை வெளியிடும் பெருமை அமெரிக்காவைச் சேர்கிறது.

அன்ரன் : மிகச் சிறந்ததைக் கூறுங்கள்.

அகஸ்ரின் : திருப்பாடுகளின் சபையாரால் வெளியிடப்படும் **சைன்** என்ற பத்திரிகையே உயர்ந்த தானத்தைப்பெறும். மிகஉயர்ந்த நடையில், கருத்தாழம்நிரம்பிய கட்டுரைகளுடன் அழகான வர்ணப்படங்கள், நிழற்படங்களுடன் வெளியாகிறது. மாதர்பகுதி, கேள்விபதில், திரைப்பட விமர்சனங்கள் இப்பத்திரிகையின் தனியம்சங்களாகும்.

பெரியண்ணு : ஆயின் அதிக பிரதிகள் வெளியிடும் சஞ்சிகை முன்னர் எங்கள் சம்பாஷணையிலிடம் பெற்ற **கொலம்பியா** சஞ்சிகைதான். அதற்கு அடுத்ததாகக் **கதலிக் டைஜஸ்ற்** வருகிறது.

அஞ்சலா : **மாறிஸ்ற் மிஷன்** என்றொரு சஞ்சிகை அமெரிக்காவிலிருந்து எங்கள் பாடசாலைக்கு வருகிறது. கண்கவர் வர்ணப்படங்கள், நிழற்படங்கள் சிறு கட்டுரைகளுடன் அழகாக வெளியிடுகிறார்கள். சிஸ்ரர் அகஸ்ரின் என்ற கன்னிகையே இப்பத்திரிகையின் ஆசிரியை.

நிர்மலா : எனக்குப் பிடித்தது **வார்த்தை** என்ற சஞ்சிகைதான். அயர்லாந்திலிருந்து வெளியாகும் இப்பத்திரிகைபற்றி முன்னர் அறிந்திருக்கிறோம். பத்திரிகை முழுவதையும் படங்களால் நிரப்பியிருக்கிறார்கள்.

கார்மெலா : சிறுவர்கட்காக வெளியாகும் **இமல்டிஸ்ற்** சஞ்சிகையை மறந்துவிட்டீர்களே.

அன்ரன் : சிறுவர்கட்காக வெளியாகும் பத்திரிகையைப்பற்றிப் பெரியவர்கள் கவனிப்பார்களா? இந்தப் பத்திரிகை முழுவதிலும் சிறுகதைகளைத் தவிர வேறெதையுமே காணவியலாது.

அகஸ்ரின் : **கத்தோலிக்க கொள்கை, கத்தோலிக்க உலகம்** என்ற இரு மாதசஞ்சிகைகள் அமெரிக்காவிலிருந்து பிரசுரமாகின்றன. பெருமளவில் கத்தோலிக்கரல்லாதாராலும் வாசிக்கப்படும் இச்சஞ்சிகைகள் திருச்சபையின் கொள்கைகளின் விளக்கங்களைப் படித்தோரும், பாமரரும் விளங்கிக்கொள்ளும்முறையில் மிகத் தெளிவாகப் பிரசுரித்துவருகின்றன.

அப்பா : ஏராளமான கத்தோலிக்க சஞ்சிகைகளை இன்று நாம் காண்கிறோம் இவற்றில் தனிப்பட்ட ஒரு புனிதரைச் சிறப்பாகக் கொண்டு வெளிவரும் சஞ்சிகைகளில் பிரசித்தி பெற்றது எது?

பெரியண்ணு : கிறிஸ்துநாதரின் திரு இருதயமதான் முதலாவதாக விளங்குகிறது. **திருஇருதயத்தூதன்** என்ற நாமத்துடன் உலகின் அத்தனை தேசங்களிலுமிருந்து சங்கிலித்தொடர்போல வெவ்வேறு மொழிகளிலெல்லாம் ஒன்றுக்கொன்று நெருங்கிய இணைப்புடன் சஞ்சிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன.

அகஸ்ரின் : தேவதாய்க்கும் தனிச் சிறப்புக்கொடுக்கலாம். ஆயின் தேவதாயின் பல நாமங்களிலும் சஞ்சிகைகள் உண்டு. சிறப்பாக விளங்குவது **சதாசகாய நோவனை** சம்பந்தமான சஞ்சிகைகள்தான். அதற்கடுத்த பத்திமாபக்தியையும், லூர்துபக்தியையும், வியாகுலபக்தியையும் விளக்கும் சஞ்சிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன.

பெரியண்ணு : மற்றைய புனிதர்களுள் அற்புதவரத்தரான **அந்தோனியாரின்** சஞ்சிகைகளே அதிகமாக விற்பனையாகின்றன. **சூசையப்பர்** அதற்கடுத்த பெருமையைப் பெறுகின்றார்.

அகஸ்ரின் : கத்தோலிக்க மாத சஞ்சிகைகளைப்பற்றிப் பேசும்போது மிகமுக்கியமான இரண்டைத் தவறவிட்டுவிட்டோம். இப்போதுதான் நினைத்தேன். **லிகோரியன்** போறிஞர்களால் மதிக்கப்படும் சஞ்சிகை. **எக்ஸ்ரென்சன்** பெரியஅளவில் கட்டுரைகளையும், ஓவியங்களையும் தாங்கி வருவது. இம்மாத சஞ்சிகைகட்கு உலகமெங்கணும் நல்ல செல்வாக்குண்டு.

அப்பா : உலகப் பொதுமொழியான ஆங்கிலத்தில் வெளியாகி அகில உலகத்திலும் மதிப்புப்பெற்ற கத்தோலிக்க பிரசுரங்களைப்பற்றிக் கவனித்தோம். இனி எங்கள் தமிழ்மொழியில் வெளியாகும் சஞ்சிகைகள் பற்றிப் பேசுவோம்.

அம்மா : எங்களுடைய பத்திரிகை என்ற பெருமையைக் கொண்டுள்ள **பாதுகாவலனைப்பற்றிச்** சொல்லுங்கள்.

அப்பா : இன்று இலங்கையில் வெளியாகும் தமிழ் வாரப் பத்திரிகைகளுள் வயதில் மூத்ததுஇது. தமிழில் வெளியாகும் கத்தோலிக்க வாரசஞ்சிகைகட்குள் சிறந்தது இது. இன்றைய நவீனநாகரிகங்கள் சிலவற்றை இப்பத்திரிகைகொண்டிருக்கவில்லை யென்பதைத்தவிர வேறென்ன குறையைக் காணலாம்?

பெரியண்ணு : நாம மேலே குறிப்பிட்ட பல ஆங்கில சஞ்சிகைகளில் அவ்வப்போது வெளியாகும் சிறந்த, சுவைமிக்க, கருத்தாழம் நிரம்பிய அம்சங்களெல்லாம் அழகாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இப்பத்தி

(8-ம் பக்கம் பார்க்க)

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday March 18-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org